பாடம் - ரோமன் கத்தோலிக்கம்

அலகு – 01 தரம் - 08

## புனித லூக்கா நற்செய்தி ஆசிரியர்

1. புனித லூக்கா நற்செய்தியின் ஆசிரியர் யார்?
   புனித லூக்கா

2. புனித லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட ஆண்டு எது?
   கி.பி 80 – 85 காலப்பகுதியில்

3. புனித லூக்கா நற்செய்தியின் அடையாளம் எது?
   எருது

4. புனித லூக்கா நற்செய்திக்கு ஏன் எருது அடையாளமாக கொடுக்கப்பட்டது?
   ஆரம்ப காலங்களில் பலிக்கு எருது பயன்படுத்தப்பட்டது. புனித லூக்கா நற்செய்தியும் குரு செக்கரியாசின் பலியோடு ஆரம்பிப்பதால், புனித லூக்கா நற்செய்திக்கு எருது அடையாளமாக கொடுக்கப்பட்டது.

5. புனித லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட இடம் எது?
   சிரியா அந்தியோக்கியாவில்

6. புனித லூக்கா நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள்?
   1. ஏழைகளின் நீதி 2. புற இனத்தவர் நீதி 3. அன்பின் நீதி 4. 3ம் நற்செய்தி
   5. செபத்தின் நற்செய்தி 6. பெண்களின் நற்செய்தி 7. இரக்கத்தின் நற்செய்தி
   8. மீட்பின் நற்செய்தி 9. சமூக நற்செய்தி 10. தாழ்ச்சியின் நற்செய்தி

7. புனித லூக்கா நற்செய்தியை எழுதுவதற்கான விடயங்களை யாரிடமிருந்து பெற்றுக் கொண்டார்?
   1. திருத்தூதர்களிடமிருந்து 2. அன்னை மரியாவிடமிருந்து

8. புனித லூக்கா பற்றி 5 விடயங்கள் தருக?
   1. இவர் ஓர் வைத்தியர். 2. புனித பவுலின் பயணத் தோழன். 3. இவர் ஒரு புறவினத்தவர்.
   4. இவரது பெற்றோர் கிரேக்கர் 5. இவர் புனித லூக்கா நற்செய்தியின் ஆசிரியர்.

9. புனித லூக்கா எழுதிய வேறு நூல் எது?
   திருத்தூதர் பணி நூல்

10. திருத்தூதர் பணி நூலின் ஆசிரியர் புனித லூக்கா என்பதற்கான ஆதாரங்கள் எவை?
    1. மொழி 2. மொழி நடை

11. புனித லூக்கா புனித பவுலின் நண்பர் என்பதற்கான ஆதாரங்கள் எவை?
    1. 2 திமோத்தேயு 4:11 இல் "என்னுடன் லூக்கா மட்டுமே இருகிறார்: என்று கூறியது
    2. பிலமோன் 1: 24ல் "என் உடன் கைதியாக உடன் உழைப்பாளர் லூக்காவும் வாழ்த்துக்கூறுகின்றார்."
    3. கொலோசையர் 4 :14ல் "அன்பான மருத்துவர் லூக்காவும். தோமாவும் உங்களை வாழ்த்துகின்றனர்."
    4. பவுலின் 3 பயணங்களிலும் பயணத் தோழனாக இருந்தமை.
    5. புனித லூக்கா திருத்தூதர் பணி நூலில் "நாங்கள்" என்று குறிபடுவதில் இருந்து

12. புனித பவுல் பிலிப்பியில் செய்த புதுமை யாது?
    தீய ஆவி பிடித்த பெண்ணைக் குணமாக்கியது

13. "நீ இவரை விட்டுப் போகுமாறு இயேசுகிறிஸ்துவின் பெயரால் உனக்குக் கட்டளையிடுகின்றேன்" என்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
    யாரால் - புனித பவுலால் யாருக்கு - தீய ஆவி பிடித்த பெண்ணுக்கு

14. புனித லூக்கா போல் நற்செய்தியை அறிவிக்க நீர் செய்யக் கூடிய 5 செயல்கள் தருக?
    1. எங்கள் பாடும் ஆற்றலால் இறைவனைப் புகழ்தல்.
    2. எங்கள் எழுதும் ஆற்றலால் இறைவனைப் பற்றி எழுதுதல்.
    3. இறைவின் மீட்புத்திட்டத்தை சுவரொட்டியாக தயாரித்தல்.
    4. தகவல் தொழிநுட்ப சாதனங்களால் இறைவனின் அற்புதச் செயல்களை வெளிப்படுத்தல்.
    5. முன்மாதிரிகையான வாழ்க்கையால் இறைவனுக்கு சான்று பகர்தல்.

அலகு - 02

## புனித லூக்கா நற்செய்தியின் பின்னணி

1. புனித லூக்காஸ் நற்செய்தி எழுதப்பட்டதன் நோக்கம் என்ன?
இயேசுக் கிறிஸ்து யூதர்களுக்கு மட்டுமல்ல உலக மக்கள் அனைவருக்கும் மீட்பர் என்பதை எடுத்து காட்டவே நற்செய்தியை எழுதினார்.

2. புனித லூக்காஸ் நற்செய்தி எழுதப்பட்ட பின்னணி யாது?
புற இனக் கிறிஸ்தவர்களுக்கு எதிராக உள்ளிருந்தும் வெளியில் இருந்தும் எதிர்ப்புக்கள் வந்த சூழ்நிலையில் நற்செய்தியை எழுதினார்.

3. புனித லூக்காஸ் நற்செய்தி யாருக்காக எழுதப்பட்டது?
யூதர்களுக்காகவும், புற இனத்தவர்களுக்காகவும்.

4. புனித லூக்காஸ் இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல மக்கள் அனைவருக்கும் மீட்பர் என்பதை எடுத்து காட்ட முன்வைத்த காரணங்கள் எவை?.
   - ஆதாம் கடவுளால் உண்டானவர், ஆதாமிலிருந்தே இயேசுவின் தலைமுறை ஆரம்பமாகியது. எனவே இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல மக்கள் அனைவருக்கும் மீட்பர.
   - "உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" என்ற பாடலில் இயேசு அனைவருக்கும் மீட்பர் என வெளிப்படுத்தப்படுகின்றது.
   - சிமியோன் இயேசுவை கையில் ஏந்தி "மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்படுத்தின உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. என்பதில் இயேசு அனைவருக்கும் மீட்பர் என வெளிப்படுத்தப்படுகின்றது.
   - நல்ல சமாரித்தன் கதை வழியாகவும் இயேசு பிற இனத்தவருக்கும் மீட்பர் என வெளிப்படுத்தப்படடது.

5. நல்ல சமாரித்தன் கதையை எழுதுக?
ஒருவர் எருசலேமிலிருந்து எரிகோவிற்குப் போகும் போது கள்வர் கையில் அகப்பட்டார். கள்வர் அவரிடமிருந்த பொருட்களை எடுத்துக் கொண்டு, அவரை காயப்படுத்தி விட்டு சென்றனர். அவ்வழியே குரு வந்தார் உதவி செய்யாமல் போய் விட்டார். பின் லேவியர் ஒருவர் வந்தார் அவரும் உதவி செய்யாமல் போய் விட்டார். அதன் பின் அவ்வழியே சமாரியர் வந்தார். அவர் காயப்பட்டவருக்கு உதவி செய்தார். அவ்வழியே வந்த மூவரில் யார் நண்பர் என்றால் உதவி செய்தாவரே.

**6. யாரால் - யாருக்கு**

1. போதகரே நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன வேண்டும்.
யாரால் - திருச்சட்ட அறிஞரால்
யாருக்கு - இயேசுவுக்கு

2. திருச்சட்ட நூலில் என்ன எழுதியிருக்கிறது? அதில் நீர் என்ன வாசிக்கின்றீர் என்று கேட்டார்.
யாரால் - இயேசுவால்
யாருக்கு - திருச்சட்ட அறிஞருக்கு

3. எனக்கு அடுத்து இருப்பவர் யார்?
யாரால் - திருச்சட்ட அறிஞரால்
யாருக்கு - இயேசுவுக்கு

அலகு - 03

## புனித லூக்கா நற்செய்தியின் வேறு பெயர்கள்

1. புனித லூக்கா நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள்?
   1. ஏழைகளின் நற்செய்தி
   2. பிற இனத்தவரின் நற்செய்தி
   3. அன்பின் நற்செய்தி
   4. செபத்தின் நற்செய்தி
   5. பெண்களின் நற்செய்தி
   6. இரக்கத்தின் நற்செய்தி
   7. மீட்பின் நற்செய்தி
   8. சமூக நீதியின் நற்செய்தி
   9. ஒடுக்கப்பட்டவர்களின் நற்செய்தி
   10. தூய ஆவயின் நற்செய்தி

2. புனித லூக்கா நற்செய்தி செபத்தின் நற்செய்தி என அழைக்கப்படுவதற்கு காரணம் யாது?
   செபம் பற்றி கூடிய கவனம் செலுத்தியிருப்பதால் செபத்தின் நற்செய்தி என அழைக்கப்படுகின்றது.

3. புனித லூக்கா நற்செய்தி செபத்தின் நற்செய்தி என அழைக்கப்படுவதற்கான ஆதாரங்கள்?
   - இயேசு திருமுழுக்குப் பெற்று, இறைவனிடம் வேண்டும் போது அவர் மீது தூய ஆவியானவர் இறங்கிய நிகழ்வின் மூலம்.
   - சீடர்களை தெரிவு செய்யும் முன் செபித்த நிகழ்வின் மூலம்.
   - சீடர்களுக்கு செபிக்க கற்றுக் கொடுத்த நிகழ்வின் மூலம்.
   - மனந்தளராமல் இடைவிடாமல் செபிக்க வேண்டும் என்பதை உவமை மூலம் கூறிய போது.

4. இயேசு சீடர்களுக்கு கற்றுக் கொடுத்த செபம் யாது?
   "விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் அன்புத் தந்தையே.." என்னும் செபம்.

5. இயேசு மனந்தளராமல் இடைவிடாமல் செபிக்க வேண்டும் என்பதற்கு கூறிய உவமை எது?
   நேர்மையற்ற நடுவனும் கைம்பெண்ணும்

6. நேர்மையற்ற நடுவனும் கைம்பெண்ணும் உவமையை எழுதுக?
   ஒரு நகரில் நடுவர் ஒருவர் இருந்தார. அவர் யாருக்கும் அஞ்சி நடப்பதில்லை. அந்நகரில் ஒரு கைம்பெண் ஒருவரும் இருந்தார். அப் பெண் நடுவரிடம் தனக்கு நீதி பெற்றுத் தருமாறு தினமும் தொந்தரவு செய்து கொண்டே இருப்பார். இதனால் அப் பெண்ணின் தொந்தரவு தாங்க முடியாமல் அந்த நடுவர் அப் பெண்ணிற்கு நீதி பெற்றுக் கொடுத்தார்.

7. நேர்மையற்ற நடுவனும் கைம்பெண்ணும் உவமை மூலம் எமக்கு உணர்த்தப்படும் செய்தி யாது?
   நாம் இறைவனை நோக்கி மனந்தளராமல் இடைவிடாமல் செபிக்க வேண்டும்.

8. புனித லூக்கா நற்செய்தி பெண்களின் நற்செய்தி என அழைக்கப்படுவதற்கு காரணம் யாது?
   ஏனைய நற்செய்திகளை விட இதில் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால்.

9. புனித லூக்காஸ் நற்செய்தியில் பெண்கள் பற்றி குறிப்பிட்ட சந்தர்ப்பங்களை தருக?
   - இயேசுவின் தாய் மரியாள் பற்றி கூறப்பட்டுள்ளது
   - எலிசபேத் பற்றி கூறப்பட்டுள்ளது
   - அன்னா பற்றி கூறப்பட்டுள்ளது
   - நயீன் ஊர் கைம்பெண் பற்றி கூறப்பட்டுள்ளது
   - இயேசுவுக்கு பணிவிடை புரிந்த சில பெண்கள் பற்றி கூறப்பட்டுள்ளது
   - மார்த்தாள் மரியாள் பற்றி கூறப்பட்டுள்ளது
   - எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுவது பற்றி கூறப்பட்டுள்ளது
   - உடல் ஊனமுற்ற பெண் பற்றி கூறப்பட்டுள்ளது

10. புனித லூக்கா நற்செய்தி ஏழைகளின் நற்செய்தி என அழைக்கப்படுவதற்கு காரணம் யாது?
இயேசு ஏழைகளை ஒதிக்கி வைக்காது, அவர்களும் இறைவனுக்கு ஏற்புடையவர்கள் என்று கூறுவதால்

11. புனித லூக்கா நற்செய்தி ஏழைகளின் நற்செய்தி என அழைக்கப்படுவதற்கான ஆதாரங்கள்?
    1. இயேசுவின் பிறப்பு ஏழை இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டதால்
    2. இயேசு இறையாட்சி ஏழைகளுக்குரியது என கூறியதால்

12. புனித லூக்கா நற்செய்தி ஒடுக்கப்பட்டவர்களின் நற்செய்தி என அழைக்கப்படுவதற்கு காரணம் யாது?
இந் நற்செய்தியில் ஒடுக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுவதால்.

13. புனித லூக்கா நற்செய்தி ஒடுக்கப்பட்டவர்களின் நற்செய்தி என அழைக்கப்படுவதற்கான ஆதாரம் யாது?
இதில் சக்கேயுவின் வாழ்க்கைச் சம்பவம் கூறப்படுகின்றது.

14. சக்கேயுவின் வாழ்க்கைச் சம்பவம் எழுதுக?
சக்கேயு என்ற ஒரு செல்வர் இருந்தார். அவர் வரி தண்டுபவர். அவர் இயேசுவைக் காணவிரும்பினார். ஆனால் அவர் குள்ளனாக இருந்தமையால், மக்கள் கூட்டத்திற்குள் இயேசுவைக் காண முடியவில்லை. அதனால் இயேசு வரும் வழியில் இருந்த முசுக்கட்டை மரத்தின் மீது ஏறிக் கொண்டார். இயேசு மரத்தின் அருகில் வந்ததும் " சக்கேயு விரைவாய் இறங்கி வாரும் இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்" என்றார். சக்கேயு ஆண்டவரே, என் உடமையில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்து விடுகின்றேன். எவரிடமாவது ஏமாற்றி எதையாவது பறித்திருந்தால் நான்கு மடங்காக திருப்பி கொடுத்து விடுகின்றேன்" என்றார். இயேசு "இன்று இவ் வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" என்று கூறினார்.

அலகு - 04

## புனித லூக்கா நற்செய்தியின் படிப்பினைகள்

1. புனித லூக்கா நற்செய்தியின் படிப்பினைகள் எவை?
    1. மகிழ்ச்சியும் நன்றியும்
    2. தமக்குரியதை பொறுப்புடன் பயன்படுத்தல்.
    3. சமய சடங்குகள்

2. புனித லூக்கா நற்செய்தியில் மகிழ்ச்சியும் நன்றியும் என்ற படிப்பினையில் உள்ள விடயங்கள் எவை?
    1. மரியாளின் பாடல்
    2. செக்கரியாசின் பாடல்
    3. வானதூதர்களின் பாடல்
    4. சிமியோனின் பாடல்

3. புனித லூக்கா நற்செய்தியில் தமக்குரியதை பொறுப்புடன் பயன்படுத்தல். என்ற படிப்பினையில் உள்ள விடயங்கள எவை?
    1. உள்ளவர்கள் இல்லாதவர்களோடு பகிர திருமுழுக்கு யோவானின் அழைப்பு.
    2. அறிவற்ற செல்வன் உவமை வழியாக செல்வத்தின் மீது பற்றின்றி வாழ அழைப்பு.

4. புனித லூக்கா நற்செய்தியில் சமயச்சடங்குகள் என்ற படிப்பினையில் உள்ள விடயங்கள் எவை?
    1. செக்கரியா பீடத்தில் தூபம் காட்டும் நிகழ்வு.
    2. யூத ஆண் குழந்தைகள் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படுகின்ற சடங்கு முறை.
    3. இயேசு பாஸ்கா விழா கொண்டாட பெற்றோருடன் எருசலேம் கோவலுக்கு சென்றது.

5. நீர் செல்வந்தராயின் உம்மிடமுள்ள செல்வத்தை எவ்வாறு பயன்படுத்துவீர்?
    1. ஏழைகளுக்கு கொடுப்பேன்.
    2. கல்வி முன்னேற்றத்திற்காக உதவுவேன்.
    3. யாரும் இல்லாத நோயாளிகளுக்கு உதவுவேன்.
    4. ஆனாதை மடங்களுக்கு கொடுப்பேன்.
    5. ஊனமுற்றவர்களை பாராமரிக்கும் இல்லங்களுக்கு உதவுவேன்

6. கத்தோலிக்கராகிய நீர் உமக்குரிய சமயச் சடங்குகளை எவ்வாறு கடைப்பிடிப்பீர்?
    1. ஞாயிற்றுக் கிழமைகளிலும், கடன் திரு நாட்களிலும் திருப்பலியில் பங்கு கொள்ளல்.
    2. உரிய வயதில் அருட்சாதனங்களைப் பெறுதல்.
    3. ஆலய பணிகளில் ஈடுபடுதல்.
    4. வீட்டில் செபமாலை சொல்லுதல்.
    5. மறைக்கல்வி, திருப்பாலத்துவ சபைக்கு செல்வேன்.

7. செல்வரும் இலாசரும் என்ற உவமையை எழுதுக?
    செல்வர் ஒருவர் இருந்தார். அவர் நாள் தோறும் விருந்துண்டு இன்பமாக வாழ்ந்தார். லாசர் என்ற ஏழை ஒருவர் செல்வந்தரின் வீட்டு வாசலில் இருந்தார். ஆனால் அந்த செல்வந்தர் ஏழைக்கு உதவி செயவதில்லை. அந்த ஏழை இறந்தார். வானதூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு சேர்த்தனர். செல்வந்தரும் இறந்தார். அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டார். அண்ணார்ந்து பார்த்த போது ஏழை லாசர் ஆபிரகாமின் மடியில் இருப்பதைக் கண்டார். அவர் உரத்த குரலில், ''தந்தை ஆபிரகாமே எனக்கு இரங்கும், இலாசரின் விரல் நுனியை தண்ணீரில் நனைத்து எனது நாவை குளிரச் செய்யும், இந்த தீப்பிளம்பில் மிகவும் வேதனைப்படுகின்றேன்'' என்று கத்தினார். அதற்கு ஆபிரகாம் ''மகனே நீ உன் வாழ்நாளில் இன்பங்களையே பெற்றாய், ஆனால் இலாசரோ துன்பத்தையே பெற்றார். அதனால் அவர் இங்கு இன்பத்தையும், நீர் வேதனையையும் அனுபவிக்கின்றாய்'' என்றார்.

அலகு - 05

## புனித லூக்கா நற்செய்தியின் அமைப்பு

1. புனித லூக்கா நற்செய்தியின் அமைப்பில் உள்ள விடயங்கள் எவை?
   1. அர்ப்பணம்
   2. இயேசுவின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள்
   3. திருப்பணிக்குத் தயார் செய்தல்.
   4. இயேசுவின் கலிலேயப் பணி
   5. இயேசு கலிலேயாவிலிருந்து எருசலேம் நோக்கிப் பயணம்
   6. எருசலேமில் திருப்பயணம்
   7. பாடுகள்,மரணம்,உயிர்ப்பும், காட்சியளித்தலும்

2. புனித லூக்கா நற்செய்தியின் அமைப்பில் உள்ள விடயங்களை விளக்குக?
   1. **அர்ப்பணம்**
      இவர் தனது நூலை 'மாண்புகு தியோபில்' என்பவர்க்கு அர்ப்பணம் செய்துள்ளார். இவரின் இரண்டாம் நூலாகிய திருத்தூதர்பணி நூலையும் அவருக்கே அர்ப்பணம் செய்துள்ளார்.

   2. **இயேசுவின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள்**
      இயேசுவின் குழந்தைப் பருவத்தை சிறப்பான முறையில் எழுத விரும்பியதால் இயேசுவின் பிறப்பு, இயேசுவின் குழந்தைப் பருவம், குழந்தை இயேசுவை அர்ப்பணம் செய்தல், பன்னிரண்டு வயதில் எருசலேம் கோயிலில் பெற்றோரை விட்டு பிரிந்து, மறுபடியும் கோவலில் கண்டு பிடிக்கப்பட்டது ஆகிய நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

   3. **திருப்பணிக்குத் தயார் செய்தல்.**
      இயேசுவின் வருகைக்கு மக்களை ஆயத்தப்படுத்துவதே திருமுழுக்கு யோவானின் பணியாக அமைந்தது. எனவே திருமுழுக்கு யோவானின் வாழ்க்கை, அவரது போதனைகளைளும், இயேசு அலகையால் சோதிக்கப்பட்டதும் இப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

   4. **இயேசுவின் கலிலேயப் பணி**
      இயேசு தமது பகிரங்கப் பணியை கலிலேயாவில் ஆரம்பித்தார். அவரது போதனைகளும் குணமளிக்கும் புதுமைகள் சிலவும் இப்பகுதியில் காணப்படுகின்றது.

   5. **இயேசு கலிலேயாவிலிருந்து எருசலேம் நோக்கிப் பயணம்**
      இயேசு கலிலேயாவில் திருப்பணியை முடித்த பின் தம் பணியை தொடர்ந்து ஆற்ற எருசலேமிற்குச் சென்றதும், கிஸ்தவ வாழ்க்கைகான அநேக படிப்பினைகளும் இப்பகுதியில் காணப்படுகின்றன.

   6. **எருசலேமில் திருப்பயணம்**
      இயேசு எருசலேமில் ஆற்றிய திருப்பணிகள் இங்கு விபரிக்கப்படுகின்றன. இயேசு எருசலேமில் நுழைதல், இயேசு எருசலேம் ஆலயத்தை தூய்மையாக்குதல், இயேசு எருசலேமில் போதித்தவை, செய்தவை விபரிக்கப்படுகின்றன.

   7. **பாடுகள், மரணம், உயிர்ப்பும், காட்சியளித்தலும்**
      நற்செய்திகளில் மிகவும் முக்கிய பகுதி என்று அழைக்கப்படும் பாஸ்கா மறைபொருள் தொடர்பான நிகழ்வுகள் இங்கே காணப்படுகின்றன. அத்துடன் எம்மாவுசுக்குச் செல்லும் வழியில் இயேசுவை இரு சீடர்கள் சந்தித்த நிகழ்வும் காணப்படகின்றது.

## மெசியா பற்றிய இறைவாக்குகள்

1. குலமுதுவர் என்ற பதம் எதை குறிக்கின்றது?
   ஒரு இனத்தின், குலத்தின் தந்தையைக் குறிக்கின்றது.

2. குலமுதுவர்களுக்கு வழங்கப்பட்ட வேறு பெயர் யாது?
   பிதாப்பிதாக்கள்

3. குலமுதுவர்கள் யாவர்?
   1. ஆபிரகாம் 2. ஈசாக் 3. யாக்கோபு

4. ஆபிரகாம் இறைவனால் அழைக்கப்படுமுன் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
   அபிராம்

5. ஆபிரகாமின் மனைவி யார்?
   சாராள்

6. இறைவன் அழைக்கு முன் சாராளின் பெயர் யாது?
   சாராயி

7. தொடக்கநூலில் குலமுதுவர்களின் வரலாறு எந்த அதிகாரங்களில் கூறப்படுகின்றது?
   11 – 50 அதிகாரங்கள்

8. ஆபிரகாம் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?
   செமித்திய அனத்தைச் சேர்ந்தவர்

9. ஆபிரகாமின் தொழில் யாது?
   மந்தை மேய்த்தல்

10. ஆபிரகாமின் தந்தை பெயர் யாது?
    தெராகு

11. இறைவனால் அழைக்கப்படுமுன் ஆபிரகாமின் கடவுள் நம்பிக்கை பற்றி யாது கூறுவீர்?
    அவர் ஓர் அஞ்ஞானி

12. ஆபிரகாம் வாழ்ந்த இடத்தின் பெயர்?
    ஊர்

13. ஆபிரகாம் இறைவனால் அழைக்கப்பட்ட இடம் யாது?
    கானான்

14. ஆபிரகாமிற்கு வழங்கப்பட்ட வேறு பெயர்?
    விசுவாசத்தின் தந்தை

15. ஆபிரகாம் ஏன் விசுவாசத்தின் தந்தை என அழைக்கப்பட்டார்?
    இறைவனின் வாக்குறுதிகள் நிறைவறும் என விசுவசித்ததால்

16. ஆபிரகாமை இறைவன் அழைத்து கூறியது யாது?
    "நீ உன் நாட்டை விட்டும் இனத்தை விட்டும் புறப்பட்டு நான் காட்டும் நாட்டிற்குப் போ"

17. ஆபிரகாமிற்கு இறைவன் கொடுத்த வாக்குறுதிகள் எவை?
    1. உன் சந்ததியை பெருகச் செய்வேன்.
    2. உனக்கு ஒரு நாட்டைத் தருவேன்.
    3. உன் பொருட்டு உன் இனம் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும்.

18. இறைவன் ஆபிரகாமை அழைத்த போது அவரது வயது எத்தனை?
    90

19. ஆபிரகாமிற்கு ஈசாக் பிறந்த போது அவரது வயது?
100

20. ஆபிரகாம் ஆரானை விட்டு சென்ற போது அவருக்கு வயது எத்தனை?
75

21. ஆபிரகாம் ஆரானை விட்டு சென்ற போது அவருடன் சென்றவர்கள் யார்?
சாராளும், லோத்தும்

22. நாத்தான் இறைவாக்கினர் தாவீது அரசருக்கு அறிவித்த மெசியா பற்றிய இறைவாக்கு யாது?
"உனக்குப் பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப் பின் உயர்த்தி, உனது அரசை நிலைநாட்டுவேன். என் முன்பாக உனது அரசும் என்றும் உறுதியாக இருக்கும். உன் அரியணை என்றுமே நிலைத்திருக்கும்."

23. எசாயா இறைவாக்கினர் அறிவித்த மெசியா பற்றிய இறைவாக்கு யாது?
"இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக் குழந்தைக்கு அவர் " இம்மானுவேல்" என்று பெயரிடுவார்."

24. "இம்மானுவேல்" என்பதன் பொருள் யாது?
நம்மோடு கடவுள்

25. " நம்மோடு கடவுள்" என்பதன் பொருள் யாது?
இயேசு இறைமகன்

26. " எப்ராத்தா" என்பதன் பொருள் யாது?
பெத்லகேமே

27. இறைத்திட்டத்துக்குக் கீழ்ப்படிய நீர் செய்யக் கூடிய மூன்று செயற்பாடுகளை எழுதுக?
    1. இறை திட்டத்திற்கு செவிமடுத்தல்
    2. இறை திட்டத்தை விசுவசித்தல்.
    3. இறைவார்த்தையை வாசித்தல்
    4. இறை திட்டத்தை வெளிப்படுதல்

28. மூவொரு கடவுள் யார்?
பிதா, சுதன். பரிசுத்தஆவி

29. பிதா என்பர் யார்?
தந்தையாம் கடவுள்

30. சுதன் என்பர் யார்?
இறைமகன் இயேசு

31. இயேசுவின் பெற்றோர் யாவர்?
தந்தை – யோசேப்பு தாய் - கன்னி மரியாள்

32. அன்னை மரியாளுக்கு மங்கள வார்த்தை சொன்னது யார்?
கபிரியேல் என்னும் வானதூதர்

33. கபிரியேல் வானதூதர் கன்னிமரியாவுக்கு கூறிய வார்த்தை யாது?
"அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்."

34. வானதூதர் கூறிய வார்த்தையை கேட்டு அன்னை மரியாள் கூறிய பதில் யாது?
"நான் ஆண்டவரின் அடிமை, உம் செற்படியே எனக்கு நிகழட்டும்.."

35. குழந்தைக்கு "இயேசு" என பெயரிடுவார் என கூறிய இறைவாக்கினர் யார்?
இறைவாக்கினர் ஏசாயா

36. இயேசு பிறந்த காலத்தில் இருந்த உரோமைய அரசன் யார்?
அகுஸ்து சீசர்

37. இயேசுவின் கோத்திரம் எது?
தாவிது

38. இயேசுவின் பிறப்பு முதலில் யாருக்கு அறிவிக்கப்பட்டது?
இடையர்களுக்கு

39. வானதூதர் இடையர்களுக்கு கூறியது என்ன?
“இன்று ஆண்டவாரகிய மெசியா உங்களுக்காக தாவீன் கோத்திரத்தில் பிறந்துள்ளார்”

40. இயேசு பிறந்ததை தெரியப்படுத்த வானத்தில் தோன்றிய அடையாளம் எது?
விண்மீன்

41. இயேசு பிறந்த காலத்தில் யூதாவை ஆண்ட சிற்றரசன் யார்?
ஏரோது அரசன்

42. இயேசுவின் பிறப்பு வேறு யாருக்கு அறிவிக்கப்பட்டது?
ஞானிகளுக்கு

43. இயேசுவைக் காண ஞானிகள் எடுத்து சென்ற பொருட்கள் எவை?
1. பொன் 2. சாம்பிராணி 3. வெள்ளைப் போளம்

44. இயேசுவை கொல்லத் தேடிய அரசன் யார்?
ஏரோது அரசன்

45. இயேசுவுக்கு விருத்தசேதனம் எத்தனையாம் நாள் கொடுக்கப்பட்டது?
8ம் நாள்

46. இயேசுவை கோயிலில் காணிக்கையாக கொடுத்த போது அவரோடு பலியாக கொடுக்கப்பட்ட பொருட்கள் எவை?
ஒரு சேடி மாடப்புறா அல்லது இரு புறாக் குஞ்சுகள்

47. யூத இனத்தின் மறை, இனச்சம்பிரதாய சடங்குகள் எவை?
1. ஏட்டாம் நாள் விருத்தசேதனம் செய்தல்
2. பெயரிடுதல்
3. தூய்மையாக்கும் சடங்கை நிறைவேற்றல்
4. தலைப்போறான குழந்தையை ஆண்டவருக்கு அர்பணித்தல்

48. திருக்குடும்ப அங்கத்தவர்கள் யாவர்?
1. புனித யோசேப்பு
2. புனித கன்னி மரியாள்
3. இயேசு

49. திருக்குடும்பத்தினர் யூதமத, இன சம்பிரதாயச் சடங்குகளை பின்பற்றினர் என்பதை எடுத்துக்காட்டும் செயல்கள் எவை?
1. இயேசுவுக்கு விருத்தசேதனம் கொடுத்தது
2. இயேசுவை காணிக்கை கொடுத்தது
3. “இயேசு” என்ற பெயரை வைத்தது

50. திருக்குடும்பத்தினரின் முன்மாதிரிகையான வாழ்கையை பின்பற்றி நாமும் செய்யக் கூடியவை எவை?
1. மத சம்பிரதாயங்களை மதித்து நடத்தல்
2. சமூக சட்டங்களை கடை பிடித்தல்
3. பிறருக்கு உதவுதல்
4. இயேசுவைப் போல் பெற்றோருக்கு கீழ்ப்படிதல்
5. யேசுவைப் போல் பெற்றோர்ருக்கு உதவுதல்

51. இயேசுவின் பிறப்பை பற்றி இறைவாக்குரைத்த இறைவாக்கினர் யார்?
இறைவாக்கினர் ஏசாயா

52. இயேசுவின் பிறந்த தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
மார்கழி 25ம் திகதி

53. மரியாளின் உறவு முறையானவர்?
எலிசபெத்தம்மாள்

54. செக்கரியா, எலிசபெத்தின் மகன் யார்?
திருமுழுக்கு யோவான்

55. திருமுழுக்கு யோவான் இயேசுவுக்கு எத்தனை மாதத்தால் மூத்தவர்?
6 மாதத்தால்

56. நத்தார் தினத்தில் கிறிஸ்தவ வீடுகளில் அமைக்கப்படுவது எது?
பாலன் குடில்

57. நத்தார் தினத்தில் நீர் செய்யக் கூடிய நற்செயல்கள் 5 தருக?
1. வயது முதிர்ந்தவர்களுக்கு உதவுதல்
2. பெற்றோருடன் வைத்தியசாலையில் உள்ள யாருமில்லாத நோயாளிகளை பார்வையிடல்
3. நண்பர்களுடன் இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபடல்.
4. ஏழைகளுக்கு உதவுதல்.
5. ஆலயப்பணிகளில் உதவுதல்.

58. இயேசுவின் புகழ்ச்சிப் பாடலைப் பாடியவர்கள் யார்?
வானதூதர்கள்

59. இறைவார்த்தைகளை மனனம் செய்க.
1. அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்.
2. இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர், அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்.
3. நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்.
4. அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன்.
5. ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்பணிக்கட்டும்.

அலகு – 08

## தூய திருமுழுக்கு யோவான்

1. திருமுழுக்கு யோவானின் பெற்றோரின் பெயர் யாது?
செக்கரியா – எலிசபெத்

2. திருமுழுக்கு யோவானின் பிறப்பு யார் மூலம் செக்கரியாவுக்கு அறிவிக்கப்பட்டது?
கபிரியேல் வானதூதர் மூலம், "செக்கரியா அஞ்சாதீர் உமது மன்றாட்டு கேட்கப்பட்டது. உம் மனைவி எலிசபேத் உமக்கு ஒரு மகனை பெற்றெடுப்பார் அவருக்கு யோவான் எனப் பெயரிடுவீர்.

3. பழைய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவானைப்பற்றி முன்னறிவிக்கப்பட்டது என்ன?
"இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன் அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்."

4. எசாயா இறைவாக்கினர் திருமுழுக்கு யோவான் பற்றி கூறியது யாது?
"பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது, ஆண்டவருக்காக வழிவை ஆயத்தமாக்குங்கள்.."

5. திருமுழுக்கு யோவான் இயேசுவுக்கு எத்தனை மாதத்தால் மூத்தவர்?
6 மாதத்தால்

6. திருமுழுக்கு யோவானின் பணி யாது?
இயேசுவின் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்வது.

7. புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவானின் பணி எவ்வாறு முன்னறிவிக்கப்படுகின்றது?
"அவர் இஸ்ராயேல் மக்களுள் பலரைத் தம் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வரச் செய்வார்."

8. செக்கரியா இறை செய்தியை நம்பாததால் எவ்வாறு தண்டிக்கப்பட்டார்?
"இதோ பாரும் உரிய காலத்தில் நிறைவேற இருக்கும் என்னுடைய வார்த்தைகளை நீர் நம்பவில்லை. ஆதலால் அவை நிறைவேறும் வரை நீர் பேச்சற்றவராய் இருப்பீர் உம்மால் பேசவே இயலாது என்றார்.

9. செக்கரியாவும் எலிசபெத்தும் வயதானவர்களாயிருந்தும் அவர்கள் வழியாக திருமுழுக்கு யோவானைப் பிறக்கச் செய்ததன் மூலம் வெளிப்படுத்தப்படும் செய்தி யாது?
இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை.

10. கபிரியேல் வானதூதர் செக்கரியாவுக்கு திருமுழுக்கு யோவானின் பிறப்பு பற்றி அறிவித்தபோது அவரைப் பற்றி கூறியது யாது?
    1. அவர் ஆண்டவர் பார்வையில் பெரியவராய் இருப்பார்.
    2. திராட்சை மதுவோ வேறு மதுவோ அருந்தமாட்டார்.
    3. தாய் வயிற்றில் இருக்கும் போதே தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவார்.

11. புனித மரியாள் எலிசபெத்தை வாழ்த்திய நேரம் என்ன நடந்தது?
எலிசபெத்தின் வயிற்றில் இருந்த குழந்தை அக்களிப்பால் துள்ளியது. இவ்வாழ்த்துரையால் அக்குழந்தை சென்மபாவத்திலிருந்து நீக்கப்பட்டார்.

12. யூதரின் முறைப்படி ஆண் குழந்தை பிறந்து எத்தனையாம் நாள் விருத்த சேதனம் கொடுப்பார்கள்?
8ம் நாள்

13. திருமுழுக்கு யோவானின் போதனைப்படி மன்னிப்பு பெற என்ன செய்ய வேண்டும்?
பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புப் பெற வெண்டும்.

14. "நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்ற கூற்றோடு தொடர்புடையவர்கள்?
மக்கள் கூட்டத்தினர் - திருமுழுக்கு யோவான்

15. திருமுழுக்கு யோவான் மக்களுக்கு திருமுழுக்கு எங்கு கொடுத்தார்?
யோர்தான் நதிக்கரையில்

**16.** திருமுழுக்கு யோவான் மக்களுக்கு கூறிய அறிவுரை யாது?
1. இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்
2. உணவு உடையவரும் அவ்வாறே செய்யட்டும்.

**17.** திருமுழுக்கு யோவான் வரிதண்டுபவர்களுக்கு கூறிய அறிவுரை யாது?
உங்களுக்கு குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்

**18.** திருமுழுக்கு யோவான் படைவீரருக்கு கூறிய அறிவுரை யாது?
1. நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள்,
2. யார் மீதும் குற்றம் சுமத்தாதீர்கள்.
3. உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்.

**19.** திருமுழுக்கு யோவான் மக்களுக்கு, வரிதண்டுபவர்களுக்கு, படைவீரர்களுக்கு கூறிய அறிவுரை இன்று எமக்கு எவ்விதம் பொருந்தும்?
1. நாம் எமது தேவைக்குரியதை கூட பகிர்ந்து வாழ அழைக்கப்படுகின்றோம்.
2. நீதியான தொழிலில் ஈடுபட வேண்டும். நாட்டு மக்களின் நலன் கருதி நேர்மையான முறையில் கடமைகளை நிறைவேற்றுதல்
3. ஊதியத்திற்கு ஏற்று சேவை செய்தல். மனித நேயம் பொது நன்மை என்பவற்றைக் கருத்தில் கொண்டு நாட்டின் நன்மைக்காக நீதியோடு உழைக்க வேண்டும்.

**20.** திழுமுழுக்கு யோவானின் போதனையில் அடங்கும் முக்கிய அம்சங்கள் எவை?
நீதி, சமத்துவம், ஒற்றுமை, ஒருமைப்பாடு, அன்பு, இரக்கம்

**21.** திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டின் பிரதான இரு காலங்களும் எவை?
1. திருவருகைக் காலம்
2. தவக்காலம்

**22.** திருமுழுக்கு யோவானின் மரணத்திற்கு காரணம்?
கலிலேயாவின் குறுநில மன்னன் ஏரோது தனது சகோதரனின் மனைவியை தன்னோடு வைத்திருந்ததனை பகிரங்கமாக சுட்டிக் காட்டியதாகும்.

**23.** திருமுழுக்கு யோவான் எவ்வாறு இறந்தார்?
தலை வெட்டுண்டு

**24.** திருமுழுக்கு யோவான் இறந்த பின் அவரது உடலை யார் அடக்கம் செய்தனர்?
திருமுழுக்கு யோவானின் சீடர்கள்

**25. யாரால் யாருக்கு**

1.“பெண்களுள் நீர் ஆசீர் பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசீர் பெற்றதே”
யாரால் - எலிசபெத்தால்
யாருக்கு - அன்னை மரியாளுக்கு

2.‘‘பாவ மன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்கு பெறுங்கள்’’
யாரால் - திருமுழுக்கு யோவானால்
யாருக்கு - மக்களுக்கு

3.“விரியன் பாம்புக் குட்டிகளே வரப்போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களுக்கு சொன்னவர் யார்”?
யாரால் - திருமுழுக்கு யோவானால்
யாருக்கு - மக்களுக்கு

4.“ஏற்கனவே மக்களின் வேர் அருகே கோடரி வைத்தாயிற்று நற்கனி கொடாத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு தீயில் போடப்படும்.”
யாரால் - திருமுழுக்கு யோவானால்
யாருக்கு - மக்களுக்கு

5.“நான் தண்ணீரினால் உங்களுக்கு திருமுழுக்கு கொடுக்கின்றேன், ஆனால் என்னைவிட வலிமை மிக்கவர் ஒருவர் வருகின்றார் அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக் கூட எனக்கு தகுதி இல்லை. அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்கு திருமுழுக்கு கொடுப்பார்”.
யாரால் - திருமுழுக்கு யோவானால்
யாருக்கு - மக்களுக்கு

6.“இது நடைபெறும் என எனக்கு எப்படித் தெரியும்? நான் வயதானவன் அது போல் என் மனைவியும் வயது முதிர்ந்தவராயிற்றே”
யாரால் - செக்கரியாவால்
யாருக்கு - வானதூதருக்கு

7.“வரவிருப்பவர் நீர் தாமோ? அல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமா”?
யாரால் - திருமுழுக்கு யோவானின் சீடரால்
யாருக்கு - இயேசுவுக்கு

8.“நீங்கள் கண்டதையும் கேட்டதையும் யோவானிடம் போய் அறிவியுங்கள”
யாரால் - இயேசுவால்
யாருக்கு - யோவானின் சீடர்களுக்கு

9.“நான் தான் உம்மிடம் திருமுழுக்கு பெற வேண்டியவன் நீரா என்னிடம் வருகிறீர”
யாரால் - திருமுழுக்கு யோவானால்
யாருக்கு - இயேசுவுக்கு

10.“இவர் தான் கடவுளின் செம்மறி உலகின் பாவங்களைப் போக்குபவர் இவரே.”
யாரால் - திருமுழுக்கு யோவானால்
யாருக்கு - இயேசுவைச் சுட்டிக்காட்டி

**26.** இயேசு திருமுழுக்கு யோவானைப் பற்றி என்ன கூறினார்?
1. அவர் காற்றில் அசையும் நாணல் புல்லைப் போல் எதிர்ப்புக்கள் முன் மனம் தளர்ந்து பணிந்து விட்டுக் கொடுப்பவர் அல்லர்.
2. தம் பணிக்கு இறுதி மட்டும் பிரமாணிக்கமாய் இருந்து சிறைவாசத்தையும் ஏற்றுக் கொள்ள தயங்காத துணிவுள்ள இறைவாக்கினர்.
3. முற்றும் துணிந்த முனிவர்.

**27.** திருமுழுக்கு யோவான் போன்று இன்றும் நீதி சமத்துவத்திற்கு தம் உயிரை தியாகம் செய்தவர்கள்?
1. அருட்பணி மைக்கல் றொட்றிகோ அடிகளார்.
2. அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார்.

**28.** திருமுழுக்கு யோவானின் மரணம். புற்றி எழுதுக?
கலிலேயாவின் குறுநில மன்னன் ஏரோது தனது சகோதரனின் மனைவியைத் தன்னோடு வைத்திருந்தான். இதை திருமுழுக்கு யோவான் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டி கடிந்து கொண்டார். இதனால் ஏரோது அவரைக் கொல்ல வழி தேடினான். ஏரோதின் பிறந்த நாள் வந்தது. ஏரொதியாளின் மகள் நடனமாடி ஏரோதை மகிழச் செய்தாள். தேற்காக ஏரோது எதை வேண்டுமானாலும் கேட்கும் படி கூறினான். சந்தர்ப்பம் பார்த்திருந்த ஏரோதியாள் திருமுழுக்கு யோவானின் தலையை தரும்படி கேட்கும் படி மகளைத் தூண்டினால் மகளும் திருமுழுக்கு யோவானின் தலையை கேட்டாள், அரசன் வருந்தினான். ஆனாலும் தன் விருந்தினர் முன் ஆணையிட்டதால் கேட்டபடி தலை வெட்டிக் கொடுத்தான். பின் திருமுழுக்கு யோவானின் சீடர்கள் வந்து அவரது உடலை எடுத்துச் சென்று அடக்கம் செய்தனர்.

## அலகு – 09

1. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்?
   திருமுழுக்கு யோவானிடம்

2. மூவொரு கடவுளின் வெளிப்பாடு இடம்பெறும் சந்தர்ப்பம் எது?
   இயேசுவின் திருமுழுக்கு

3. இயேசுவின் திருமுழுக்கின் போது ஆவியானவர் என்ன வடிவில் தோன்றினார்?
   புறாவடிவில்

4. இயேசு இறைமகன் என்பதை அவரது திருமுழுக்கு எவ்வாறு எடுத்துக் காட்டுகிறது?
   " என் அன்பார்ந்த மகன் நீரே உம் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்" என்ற குரலொலி வழியாக.

5. இயேசு அலகையினால் எத்தனை நாள் சோதிக்கப்பட்டார்?
   40 நாட்கள்

6. கிறிஸ்தவர்களுக்கு மனஸ்தாபத்தின் காலம் (தவக்காலம்) எப்போது ஆரம்பிக்கிறது?
   விபூதிப் புதனோடு

7. இயேசு எத்தனை முறை சோதிக்கப்பட்டார்?
   3 முறை

8. இயேசு முதல் முறை அலகையினால் சோதிக்கப்பட்டதையும் அதற்கு இயேசு அளித்த பதிலையும் தருக.
   **அலகை** - "நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும் படி கட்டளையிடும்"
   **இயேசு** - "மனிதர் அப்பத்தினால் மட்டும் உயிர் வாழ்வதில்லை."

9. இயேசுவின் முதலாவது சோதனையின் மூலம் நமக்கு தரும் செய்தி யாது?
   1. தமக்குள்ள அதிகாரத்தையும், ஆற்றல்களையும் தன்னலம் இன்றிச் சமுதாய நலனுக்காக பயன்படுத்த வேண்டும்.
   2. உணவினால் ஊட்டம் பெறும் உடல்சார் வாழ்க்கைக்கு மேலாக இறைவார்த்தையினால் ஊட்டம் பெறும் ஆன்மீக வாழ்வு மேலானதாகும்.

10. இயேசு இரண்டாவது முறை அலகையினால் சோதிக்கப்பட்டதையும் அதற்கு இயேசு அளித்த பதிலையும் எழுதுக?
    **அலகை** - "நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையதாகும்".
    **இயேசு** - "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக."

11. இயேசுவின் இரண்டாவது சோதனையில் நமக்கு தரும் செய்தி யாது?
    எமது வாழ்வில் இறைவனுக்குரிய இடத்தை உலக சொத்துக்கும் அதிகாரத்திற்கும் கொடுக்கக் கூடாது.

12. இயேசு மூன்றாம் முறை சோதிக்கப்பட்டதையும் அதற்கு இயேசு அளித்த பதிலையும் எழுதுக?
    **அலகை** - "நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும் உம்மைப் பாதுகாக்கும் படி கடவுள் தம் தூதருக்கு உம்மைக்குறித்து கட்டளையிவார், என்றும் உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள் என்றும் மறைநூலில் எழுதியுள்ளது".
    **இயேசு** - "உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம் என்று சொல்லியுள்ளதே"

13. இயேசுவின் மூன்றாவது சோதனை எமக்கு தரும் செய்தி என்ன?
    புகழை விரும்பி செயற்படக் கூடாது.

14. இயேசு தமது ஊரிலுள்ள தொழுகைக் கூடத்திற்கு சென்றபோது அவரிடம் கொடுக்கப்பட்ட ஏட்டுச் சுருள் பகுதி எது?
இறைவாக்கினர் ஏசாயா எழுதிய ஏட்டுச் சுருள் பகுதி "ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வை அற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்."

15. எலியா இறைவாக்கினருக்கு உதவி செய்த பெண்மணி யார்?
சீதோனைச் சேர்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம்பெண்

16. எலிசாவின் காலத்தில் தொழுநோயால் பலர் பாதிக்கப்பட்டனர் அவர்களுள் குணமடைந்தவர் யார்?
சீரியாவைச் சேர்ந்த நாமான்

17. **யாரால் யாருக்கு**
"இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை."
யாரால் - இயேசுவால்
யாருக்கு - தொழுகைக் கூடத்தில் இருந்தவர்களுக்கு

18. இயேசுவின் பணியின் நோக்கம் யாது?
ஏழைகள், அடிமைகள், துன்புறுவோர், பார்வையற்றோர் ஒடுக்கப்பட்டோருக்கு நல்வாழ்வை பெற்றுக் கொடுப்பதே.

19. திருமுழுக்கின் மூலம் நாம் பெறும் நன்மைகள் எவை?
    1. சென்ம பாவத்திலிருந்தும், கன்ம பாவத்திலிருந்தும் விடுதலை பெறல்
    2. இறைவனின் பிள்ளையாதல்
    3. மூவொரு கடவுள் வாழும் இல்லமாதல்
    4. ஆன்மாவில் அழியாத முத்திரை ஒன்றைப் பதித்திடல்
    5. இறையரசுக்கு உரிமையாகுதல்
    6. ஏனைய அருட்சாதனங்களைப் பெற தகுதி பெறல்
    7. திருச்சபையின் அங்கத்தவராகுதல்.

20. உமது வாழ்க்கையில் வரும் சோதனைகளை வெற்றி கொள்ள நீர் செய்யக் கூடியது யாது?
    1. செபம் செய்வேன்.
    2. தியானத்தில் ஈடுபடுவேன்
    3. மனதில் தைரியத்தை வளர்த்துக் கொள்வேன்.
    4. இயேசுவைப் போல் எதிர்த்து போராடுவேன்.
    5. பெரியவர்களின் ஆலோசனையைப் பெறுவேன்.

21. இயேசுவே இறைமகன் என வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் எது?
இயேசுவின் திருமுழுக்கு

அலகு – 10

## இறையாட்சி

1. இறையாட்சி என்பது யாது?
   1. இறைவனின் அதிகாரத்திற்குட்பட்டது.
   2. பாவத்தைத் தவிர்த்து இறையருளில் வாழ்வது.
   3. மனித சமுதாயம் இறை சித்தத்திற்கு ஏற்ப அன்பு, உண்மை, நீதி. நேர்மை போன்ற விழுமியங்களின் படி வாழ்வது.

2. இயேசு இறையாட்சி விழுமியங்களை எவ்வாறு கற்பித்தார்?
   உவமை மூலம்

3. உவமைகள் என்றால் என்ன?
   அறிவற்ற பாமர மக்களுக்கும் புரியும்படியாக ஆழ்ந்த உண்மைகளை எடுத்துரைக்கும் இலக்கிய நடையாகும்.

4. உவமை என்பதை கிரேக்கத்தில் எவ்வாறு அழைப்பர்?
   பராபோலே

5. இறையாட்சி பற்றிய உவமைகள் எவை?
   1. விதைப்பவன் உவமை
   2. வயலில் தோன்றிய களைகள் உவமை
   3. கடுகு விதை,
   4. புளிப்பு மா உவமை
   5. புதையல் முத்து
   6. வலை உவமை

6. இறையாட்சி பற்றிய உவமைகள் எதை விளக்கி நிற்கின்றது?
   1. இறையாட்சியின் வளர்ச்சி
   2. தடைகள்
   3. இறைவார்தையின் படி உருவாக வேண்டிய மனநிலை

7. இறையாட்சிக்குள் நுழைய வேண்டுமாயின் நாம் நிபந்தனைக்கு உட்பட்டிருக்க வேண்டும் அவ் நிபந்தனைகள் எவை?
   1. மனம்மாற வேண்டும்.
   2. நற்செய்தியை நம்ப வேண்டும்.

8. விதைப்பவன் உவமையையும் பொருளையும் தருக?

| விதைகள் விழுந்த நிலம் | விதைகளுக்கு நடந்தவை | உவமையின் விளக்கம் |
|---|---|---|
| வழியோரம் விழுந்த நிலம் | பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன. | உள்ளத்தில் விதைக்கப்பட்ட விதைகளைத் தீயோன் கைப்பற்றிச் செல்வான். |
| மண் இல்லாப் பாறைப் பகுதியில் விழுந்த விதைகள் | அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. எனினும் கதிரவன் மேலே எழ காய்ந்து வேரில்லாமல் போனது. | இறை வார்த்தையை கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள் ஆனால் அவர்கள் வேரற்றவர்கள் எனவே அவர்கள் சிறிது காலமே நிலைத்து இருப்பார்கள். இறைவார்த்தையின் பொருட்டு வேதனை ஏற்பட்டவுடன் மறந்து விடுவார்கள். |

| | | |
|---|---|---|
| முட்செடிகளின் இடையே விழுந்த விதைகள் | முட்செடிகள் வளர்ந்து நெருக்கி விட்டன. | இறைவார்த்தையைக் கேட்பாரகள். ஆனால் உலகக் கவலையும் செல்வத்தின் மீதுள்ள ஆசையால் மறந்து விடுவார்கள் |
| நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் | நூறு மடங்காக விளைச்சல் கொடுத்தன. | இறைவார்த்தையைக் கேட்டு நேர்மையாக தூய்மையாக வாழ்வார்கள். |

9. விதைப்பவன் உவமையில் வழியோரம் விழுந்த விதைகளுக்கான விளக்கம் யாது?
உள்ளத்தில் விதைக்கப்பட்ட விதைகளைத் தீயோன் கைப்பற்றிச் செல்வான்.

10. வழியோரம் விழுந்த விதைகளுக்கு என்ன நடந்தது?
பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன.

11. மண் இல்லாப் பாறைப் பகுதியில் விழுந்த விதைகளுக்கான விளக்கம் யாது?
இறை வார்த்தையை கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். சிறிது காலமே நிலைத்திருப்பார்கள். இறைவார்த்தையின் பொருட்டு சோதனை வந்தவுடன் இறை வார்த்தையை மறந்து விடுவார்கள்

12. மண் இல்லாப் பாறைப் பகுதியில் விழுந்த விதைகளுக்கு என்ன நடந்தது?
அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. எனினும் கதிரவன் மேலே எழ காய்ந்து வேரில்லாமல் போனது.

13. முட்செடிகளின் இடையே விழுந்த விதைகளுக்கான விளக்கம் யாது?
இறைவார்த்தையைக் கேட்பாரகள். ஆனால் உலகக் கவலையும் செல்வத்தின் மீதுள்ள ஆசையால் பயன் அளிக்க மாட்டார்கள்.

14. நல்ல நிலத்தில் விழுந்த விதைகளுக்கு என்ன நடந்தது?
நூறு மடங்காக விளைச்சலைக் கொடுத்தது.

15. நல்ல நிலத்தில் விழுந்த விதைகளுக்கு விளக்கம் யாது??
இறைவார்த்தையைக் கேட்டு நேர்மையாகவும் தூய்மையாகவும் வாழுவர்.

16. புதையல் பற்றிய உவமையை தருக?
ஒருவர் வேளாண்மை செய்வதற்காக நிலங்களை பண்படுத்தும் போது தற்செயலாக புதையல் ஒன்றை கண்டு கொள்வர். உடனே தனக்குள்ளதெல்லாம் விற்று அந்நிலத்தை வாங்குவர். அப்புதையலை அடைய எத்தகைய தியாகத்தையும் செய்ய தயாராக இருந்தனர்.

17. புதையல் உவமை வழியாக நமக்கு கற்பிக்கப்படும் பாடம் யாது?
   1. இறையரசை கண்டு கொண்டதும் அதை அடைய தனக்குள்ள எல்லாவற்றையும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும்.
   2. இறையரசு விலைமதிக்க முடியாதது .

18. முத்து உவமை பற்றிய உவமையை தருக?
வணிகன் ஒருவன் விலை உயர்ந்த முத்தைத் தேடி அலைகின்றான். அதைக் கண்டுகொண்டவுடன் தனக்குள்ள எல்லாவற்றையும் விற்று அதை வாங்குகின்றான்.

19. முத்து உவமை வழியாக எமக்குக் கற்பிக்கப்படுவது யாது?
   1. இறையரசை தேடி அலைந்து கண்டடைய வேண்டும்.
   2. அதற்காக எதையும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும்.
   3. இறையரசு விலை மதிக்க முடியாத ஒன்று.

20. வலை பற்றிய உவமையை தருக?
விண்ணரசு கடலில் வீசப்படும் எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொண்டுவரும் வலைக்கு ஒப்பாகும். வலை நிறைந்ததும் அதை இழுத்து கரையில் சேர்த்த பின் கரையில் உட்கார்ந்து நல்லவற்றை கூடைகளில் சேர்ப்பர். கெட்டவற்றை வெளியே எறிவர்.

21. வலை உவமை வழியாக எமக்கு கற்பிக்கப்படும் பாடம் யாது?
1. வலையில் அகப்பட்ட மீன்களை தரம் பிரித்தது போல் உலக முடிவிலும் நல்லவர்கள் கெட்டவர்கள் என தரம் பிரிக்கப்பட்டு நல்லவர்கள் விண்ணரசுக்கும், கெட்டவர்கள் தண்டனைக்கும் ஆளாக்கப்படுவர் என்று கற்பிக்கப்படுகின்றது.
2. வலையில் அனைத்து மீன்களும் அகப்பட்டது போல் விண்ணரசும் எல்லோருக்கும் உரியது என்பதும் கற்பிக்கப்படுகின்றது.

22. தூய லூக்கா நற்செய்தியில் **மட்டும்** இடம்பெறும் சில உவமைகள்.
1. நல்ல சமாரியர் உவமை.
2. காணாமற் போன மகன் உவமை.
3. செல்வரும் இலாசரும் உவமை.

23. நல்ல சமாரியர் உவமை வழியாக எமக்கு கற்பிக்கப்படும் பாடம் யாது?
இன, மத, போதங்களை மறந்து அனைவரையும் அன்பு செய்ய வேண்டும்.

24. காணாமற் போன மகன் உவமை வழியாக எமக்கு கற்பிக்கப்படும் பாடம் யாது?
தனது பாவங்களுக்காக மனம் வருந்தி, இறைவனிடம் திரும்பி வருபவரை இறைவன் அன்புடன் வரவேற்று தமது பிள்ளையாக ஏற்றுக் கொள்கிறார்.

25. செல்வரும் இலாசரும் என்ற உவமையில் இருந்து எமக்குத் தரும் செய்தி யாது?
1. செல்வத்திற்கு அடிமைப்படக் கூடாது.
2. செல்வத்தைக் கொண்டு நல்லவற்றைச் செய்ய வேண்டும்.
3. ஏழைகளுக்கு உதவி செய்து புண்ணியங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்.
4. புண்ணியங்கள் தான் எம்மை மோட்சத்திற்குள் சேர்க்கும்.
5. எம்மிடமுள்ள ஆற்றல்கள் திறமைகளையும் விருத்தி செய்து மற்றவர்களின் நலனுக்காக பயன்படுத்த வேண்டும்.

அலகு - 11

## இயேசு செய்த புதுமைகள்

1. புதுமை என்றால் என்ன?
   இயற்கைக்கு மாறாக இடம் பெறும் நிகழ்வு.

2. இயேசு செய்த புதுமைகளை எத்தனை வகைப்படுத்தலாம்?
   04 வகை
   1. இயற்கையோடு தொடர்பான புதுமைகள்
   2. நோய்களைக் குணமாக்குதல்
   3. அசுத்த ஆவிகளை விரட்டுதல்
   4. இறந்தோரை உயிர்ப்பித்தல்

**1. இயற்கையோடு தொடர்பான புதுமைகள்**

உ+ம் - 1. கடல் மீது நடத்தல்
2. காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் அடக்குதல்

**2. நோய்களைக் குணமாக்குதல்**

உ+ம் - 1. கைசூம்பியவர் ஓய்வு நாளில் நலமடைதல்
2. முடக்குவாதமுற்றவர் குணமடைதல்
3. தொழுநோயாளரின் நோய் நீங்குதல்
4. இரத்தப்போக்குடைய பெண் நலம் அடைதல்

**3. அசுத்த ஆவிகளை விரட்டுதல்**

உ+ம் - 1. கெரசேனர் பகுதியில் பேய் பிடித்தவரை குணமாக்குதல்
2. பேய் பிடித்தவரை குணப்படுத்தல்
3. இயேசுவும் பெயல் செபூலும்
4. பேய் பிடித்திருந்த சிறுவனைக் குணமாக்குதல்

**4. இறந்தோரை உயிர்ப்பித்தல்**

உ+ம் - 1. யாயீரின் மகள் உயிர் பெறுதல்.
2. இலாசர் உயிர் பெறுதல்
3. நயீன் ஊர் கைம்பெண் மகள் உயிர் பெறல்

3. இயேசு செய்த புதுமைகள் இயேசுவை யார் என எண்பித்துக் காட்டுகின்றன?
   1. இயேசு மெசியா, இறைவனின் மகன் என்பதை எண்பித்துக் காட்டுகின்றது.
   2. இறைவன் மனிதனுக்கு காட்டும் அளவற்ற அன்பை விளக்குகின்றது.
   3. இறைவன் தான் யார் என்பதை வெளிப்படுத்துகின்றார்.
   4. இயேசுவின் மறைதூதுப் பணி உறுதிப்படுத்தப்படுகின்றது.
   5. இறையாட்சியின் அடையாளமாக மிளிர்கின்றது.

4. இறையாட்சி வந்து விட்டது என்பதை எண்பிக்கும் அடையாளம் எது?
   புதுமைகள்
   **இறைவார்த்தை** – "நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகின்றேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்ததுள்ளது அல்லவா".

5. காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் அடக்குதல் என்னும் புதுமையை எழுதுக.?
   ஒரு நாள் இயேசுவும் அவரது சீடர்களும் படகில் ஏறி ஏரியின் அக்கரைக்கு சென்றார்கள். பயணத்தின் போது இயேசு படகில் தூங்கி விட்டார். அப்போது புயல் அடித்தது. படகு நீரால் நிரம்பியது. சீடர்கள் பயந்து, " ஆண்டவரே, ஆண்டவரே சாகப்போகின்றோம்" என்று சொல்லி அவரை எழுப்பினர். அவர் எழுந்து காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் கடிந்து கொண்டார். உடனே அவை ஓய்ந்தன. அவர் அவர்களிடம் " உங்கள் நம்பிக்கை எங்கே?" என்று கேட்டார். அவர்கள் "இவர் காற்றுக்கும் நீருக்கும் கட்டளையிடுகின்றார், அவை அவருக்கு கீழ்ப்படிகின்றனவே, இவர் யாரோ? " என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

6. புயலை அடக்கிய புதுமையினால் நமக்கு கிடைக்கும் செய்தி யாது?
   1. இயேசு மெசியா, இறைவனின் மகன் என்பதும்
   2. இயற்கை அவருக்கு கீழ்ப்படிகின்றன என்பதும்
   3. இயேசுவில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.
   4. நம்பிக்கை தளர்ச்சியடையும் போது தொடர்ந்து செபிக்க வேண்டும்.

7. உடல் ஊனமுற்ற பெண் ஓய்வு நாளில் குணமடைந்த புதுமையை எழுதுக?
   ஓய்வு நாளில் இயேசு தொழுகைக் கூடம் ஒன்றில் கற்பித்துக் கொண்டிருந்தார். (18) பதினெட்டு ஆண்டுகளாக உடல் நலம் குன்றிய பெண் ஒருவர் இருந்தார். அவர் சிறிதும் நிமிர முடியாதவாறு கூன் விழுந்த நிலையில் இருந்தார். இயேசு அவரிடம் "அம்மா உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்" என்று கூறி தம் கைகளை அவர் மீது வைத்தார். உடனே அவர் நிமிர்ந்து கடவுளைப் போற்றினார்.

8. உடல் ஊனமுற்ற பெண் ஓய்வு நாளில் குணமடைந்த புதுமையினால் நமக்கு கிடைக்கும் செய்தி யாது?
   1. இயேசு மெசியா, இறைவனின் மகன் என்பதும்
   2. இயேசு தாமாக முன்வந்து உதவி செய்தது போல் நாமும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.
   3. பிறரின் துன்பங்களைக் கண்டும் காணாதவாறு இருக்க கூடாது.
   4. நாம் நோயாளருக்காக செபிக்க வேண்டும்.

9. கெரசேனர் பகுதியில் போய் பிடித்தவரை குணப்படுத்திய புதுமையை எழுதுக?
   இயேசு சீடர்களுடன் கெரசேனர் பகுதிக்கு வந்தார். நீண்ட காலமாக பேய் பிடித்த ஒருவர் இயேசுவைக் கண்டதும், "இயேசுவே உன்னத கடவுளின் மகனே உமக்கு இங்கு என்ன வேலை? என்னை வதைக்க வேண்டாம்" என்று உரத்த குரலில் கூறினார். இயேசு அவரிடம் "உம் பெயர் என்ன? என்று கேட்க, இவர் "இலேகியேன்" என்றார். அவ்வழியாக பன்றிக் கூட்டம் வருவதைக் கண்டு அப் பன்றிக் கூட்டத்திற்குள் அனுப்பி விடுமாறு கேட்டார். இயேசுவும் போகுமாறு கூறினார். பேய்கள் அவரை விட்டு நீங்கி பன்றிக் கூட்டத்திற்குள் புகுந்தன. இயேசு அவரிடம் " உம்முடைய வீட்டிற்கு போய் கடவுள் உமக்கு செய்ததை எடுத்துக் கூறும்" என்றார். அவரும் அவ்வாறே செய்தார்.

10. கெரசேனர் பகுதியில் போய் பிடித்தவரை குணப்படுத்திய புதுமையினால் நமக்கு கிடைக்கும் செய்தி யாது?
    1. இயேசு மெசியா, இறைவனின் மகன் என்பதும்
    2. பேய்கள் அவருக்கு கீழ்ப்படிகின்றன என்பதும்
    3. இயேசுவில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.
    4. நாம் சாத்தானின் சோதனைக்கு உட்படாதவாறு தொடர்ந்து செபிக்க வேண்டும்.

11. யாயீரின் மகள் உயிர் பெறுதல் என்னும் புதுமையை எழுதுக?.
    தொழுகைக் கூடத் தலைவன் யாயீரின் (12) பன்னிரெண்டு வயதுடைய மகள் சாகும் தருவாயில் இருந்ததால் அவர் இயேசுவிடம் வந்து இவரின் காலில் விழுந்து தனது வீட்டிற்கு வருமாறு வேண்டினார். இயேசு அவரின் வீட்டிற்கு செல்கையில் வழியில் மக்கள் கூட்டம் அவரை சூழ்ந்து கொண்டது. அப்போது யாயீரின் வீட்டிலிருந்து ஒருவர் வந்து "உமது மகள் இறந்து விட்டாள் இனி போதகரை தொந்தரவு செய்ய வேண்டாம் " என்றார். இதைக் கேட்ட இயேசு "அஞ்சாதீர் நம்பிக்கையோடு இரும் அவள் பிழைப்பாள்" என்றார். பின் வீட்டிற்கு வந்த போது எல்லோரும் அழுது கொண்டிருந்தனர். அப்போது இயேசு "அழாதீர்கள் இவள் இறக்கவில்லை உறங்குகிறாள்" என்றார். பின் அவளது கையைப் பிடித்து " சிறுமியே எழுந்திடு!" என்றார். அவளும் உயிர் பெற்று எழுந்தாள். இயேசு நடந்ததை யாருக்கும் சொல்ல வேண்டாம் என கட்டளையிட்டார்.

12. யாயீரின் மகள் உயிர் பெறுதல் புதுமையினால் நமக்கு கிடைக்கும் செய்தி யாது?
    1. இயேசு மெசியா, இறைவனின் மகன்
    2. அவரால் இறந்தவரையும் உயிர்ப்பிக்க முடியும்
    3. இயேசுவில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.
    4. உலகில் வாழும் போது நல்லவர்களாக வாழ வேண்டும்.

13. உமது வாழ்வில் புதுமைகள் நடக்க நீர் என்ன செய்ய வேண்டும்?
    1. எல்லாம் இறைவனால் முடியும் என நம்ப வேண்டும்
    2. நம்பிக்கையுடன் செபிக்க வேண்டும்.
    3. உலகில் வாழும் போது நல்லவனாக வாழ வேண்டும்.

14. உமது நண்பி சுகம் பெற வேண்டும் என இறைவனை வேண்டி செபம் எழுதுக.
    எல்லாம் வல்ல அன்புத் தந்தையே இறைவா, உம்மை நம்பினவர்களை நீர் ஒரு போதும் கைவிட்டதில்லை என நான் அறிவேன். எனது நண்பி நோயினால் மிகவும் கஸ்ரப்படுகின்றாா். அவர் மீது இரங்கி அவருக்குள்ள நோயை நீர் தாமே தொட்டு குணப்படுத்தியருள வேண்டும் என்று உம்மை இரந்து மன்றாடுகின்றேன் ஆமென்.

அலகு – 12

## நற்கருணை ஆண்டவர்

1. இயேசு நற்கருணையை ஏற்படுத்தியது எப்போது?
பெரிய வியாழன்

2. இயேசுவின் பாஸ்கா நிகழ்வை நாம் எங்கே நினைவு கூரகின்றோம்?
திருப்பலியில்

3. கத்தோலிக்க திருவழிபாட்டின் ஊற்றும் உச்சியுமாய் இருப்பது எது?
நற்கருணை

4. "அருளடையாளங்களின் அடையாளம்" எது?
நற்கருணை

5. தூய நற்கருணையின் சிறப்பியல்புகள் (பண்புகள்) எவை?
   1. ஓர் அடையாளம்
   2. உணவு
   3. பலி
   4. உடன்படிக்கை
   5. நன்றி கூறுதல்
   6. நினைவு கூருதல்

6. நற்கருணையின் முன்னடையாளங்கள் எவை?
   1. மெல்கிசதேக் பலி
   2. மன்னா
   3. இஸ்ரயேல் மக்களின் பாஸ்கா உணவு
   4. அப்பங்களைப் பலுகச் செய்தல்

7. நற்கருணையின் முன்னடையாளங்களை விளக்குக.
   1. **மெல்கிசதேக் பலி**
   சாலோம் அரசர் மெல்கிசெதேக் முதன் முறையாக அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்து கடவுளுக்கு ஒப்புக் கொடுத்தார்.
   2. **மன்னா**
   பாலை நிலத்தில் பசியால் வாடிய இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் மன்னா உணவைக் கொடுத்து அவர்களைப் போஷித்தார்.
   3. **இஸ்ரயேல் மக்களின் பாஸ்கா உணவு**
   இஸ்ரயேலர் எகிப்திதிலிருந்து விடுதலை பெற்றதை வருடந்தோறும் பாஸ்கா விழாவாக கொண்டாடி வந்தனர். இவ்வேளையில் பாஸ்கா உணவாகிய புளியாத அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகினர்.
   4. **அப்பங்களைப் பலுகச் செய்தல்**
   புதிய ஏற்பாட்டில ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்தல் நிகழ்வு நற்கருணைக்கு முன்னடையாளமாக காட்டப்படுகின்றது.

8. நான்கு நற்செய்தியாளர்களும் குறிப்பிடும் இயேசு செய்த ஒரே ஒரு அருங்குறி எது?
அப்பங்களைப் பலுகச் செய்தல்.

9. லூக்கா நற்செய்தியின்படி இயேசு நற்கருணையை ஏற்படுத்தியது?
அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அதைப் பிட்டு அவர்களுக்கு கொடுத்து "இது உங்களுக்காகக் கொடுப்படும் எனது உடல் இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். அப்படியே உணவு அருந்திய பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து," இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை" என்றார்.

10. "கிறிஸ்துவின் மறையுடல்" எதைக் குறிக்கின்றது?
திருச்சபையை

11. நற்கருணைப் பந்தியில் பங்கு கொள்ளும் ஒருவரிடம் இருக்க வேண்டிய நற்பண்புகள் எவை?
   1. நற்கருணை ஆண்டவருக்கு மரியாதை செலுத்தி செபிக்க வேண்டும்.
   2. நற்கருணை ஆண்டவரை முழந்தால் பணிந்து ஆராதிக்க வேண்டும்.
   3. பாவங்களுக்கு மன்னிப்பு பெற்றிருக்க வேண்டும்.
   4. அயலவருக்குத் தன்னைத் தாழ்த்தி பணி செய்யும் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும்.
   5. தகுதியான முறையில் நற்கருணையை பெற்றுக்கொள்ள வேண்டும்.

12. கத்தோலிக்க திருவழிபாடுகளில் நற்கருணைக்கு ஏன் முக்கிய இடம் கொடுக்கப்படுகின்றது?
    நற்கருணை கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் இருப்பதால்

13. நற்கருணை அருளடையாளத்தின் மூலம் நாம் பெறும் நன்மைகள்?
   1. எமது ஆன்மா உணவாகின்றது.
   2. அதைப் பெறுவதால் நமது உடல் ஊட்டம் பெறுகின்றது.
   3. பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது.
   4. இயேசுவின் தியாகப் பலியில் பங்கு கொள்ள சந்தர்ப்பமாக அமைகிறது.

33. அப்பங்களைப் பலுகச் செய்தல் புதுமையை சுருக்கமாக எழுதுக?.
    இயேசு தனித்திருப்பதற்காக பெத்சாயிதா என்னும் நகருக்கு சென்றார். அதை அறிந்த மக்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். அதனால் இயேசு அவர்களுக்கு நற்செய்தியைப் போதித்து, நோய்களை குணமாக்கினார். பொழுது சாயத் தொடங்கவே பன்னிருவரும் அவரிடம் வந்து, மக்களை அனுப்பி விடும்படி கூறினர். அதற்கு இயேசு நீங்களே உணவு கொடுங்கள் என்றார். அதற்கு சீடர்கள் எங்களிடம் 5 அப்பமும், 2 மீன்களுமே உண்டு என்றனர். அவற்றை கொண்டு வரும்படி கூறி, ஆசீர்வதித்து மக்களுக்கு கொடுக்கும் படி கூறினார். சீடர்களும் பரிமாறி மிகுதியானதை 12 கூடைகளில் எடுத்தனர்.

34. தேவ நற்கருணையின் மூலம் உயிருள்ள இயேசுவைப் பெற்றுக் கொண்ட நீர் செய்யக் கூடிய நற்செயல்கள் 5 தருக.
   1. பசியால் வாடும் என் நண்பருக்கு உணவு கொடுத்து உதவுவேன்.
   2. வீட்டில் உள்ள எனது பாட்டியை பாராமரிப்பேன்.
   3. எழுத, வாசிக்கத் தெரியாத என சக மாணவனுக்கு எழுத, வாசிக்கக் கற்றுக் கொடுப்பேன்.
   4. துக்கத்தில் இருக்கும் என நண்பிக்கு ஆறுதல் கூறுவேன்.
   5. என் தாய், தந்தைக்கு அவர்களின் வேலைகளில் உதவி செய்வேன்.

35. தேவ நற்கருணையை பெற்ற பின் சொல்லக் கூடிய செபம் எழுதுக.
    அன்புத் தந்தையே இறைவா, நீர் என் உள்ளத்தில் வந்தமைக்காக நன்றி கூறுகின்றேன். நான் உமக்குரிய பிள்ளையாக வாழ என்னை வழி நடத்தும். உம்மை பெற்றுக் கொண்ட நான் பாவ வழிகளில் செல்லாமல் இருக்க என்னை திடப்படுத்தியளும். நான் மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ எனக்கு வல்லமை தாரும் ஆமென்.

அலகு - 13

## நற்கருணை விருந்திற்கு ஆயத்தம்

1. நற்கருணையைப் பெறுவதற்கு செய்ய வேண்டிய ஆன்மிக, உடல் ரீதியான ஆயத்தங்கள் எவை?
   1. ஆன்மா : பாவங்களுக்கு திருப்பலியின் தொடக்கத்தில் மனஸ்தாபப்பட்டு மன்னிப்பு பெற வேண்டும்.
   2. உடல் : திருப்பலியில் பங்குகொள்வதற்கு முன் குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலத்திற்கு முன் உணவோ, பானமோ அருந்தாமல் இருத்தல்.

2. பெரிய வியாழனன்று நடைபெற்ற பிரதான நிகழ்வுகள் 2 எழுதுக?
   1. நற்கருணையை ஏற்படுத்தியது.
   2. சீடர்களின் பாதங்களைக் கழுவியது.
   3. குருத்துவத்தை ஏற்படுத்தியது.

3. ஞாயிறு திருப்பலிக்கு செல்லாதிருததல் எத்தனையாம் கட்டளைக்கு எதிரானது?
   3 வது

4. சாவான பாவம் செய்தவர் நற்கருணை பெறுவதற்கு முன் செய்ய வேண்டியது யாது?
   ஒப்புரவு அருளடையாளத்தை பெற வேண்டும்

5. அற்ப பாவம் செய்தவர் நற்கருணை பெறுவதற்கு முன் செய்ய வேண்டியது யாது?
   மனம் வருந்தி மன்னிப்பை பெற வேண்டும்

6. நற்கருணை பெறுவதற்கு முன் நாம் செய்ய வேண்டிய ஆயத்தம் பற்றி புனித பவுல் கூறியது யாது?
   எவராவது ஒருவர் தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராக பாவம் செய்கிறார்.

7. நற்கருணை பெறுவதற்கு முன் நாம் செய்ய வேண்டிய ஆயத்தம் பற்றி திரச்சபையின் சட்டம் 916 கூறுவது யாது?
   சாவான பாவம் செய்தவர் நற்கருணை பெறுவதற்கு முன் ஒப்புரவு அருளடையாளத்தை பெற வேண்டும். பெறமுடியாத சந்தர்ப்பத்தில் மனம் வருந்தி மன்னிப்பை பெற வேண்டும். பின் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் ஒப்புரவு அருளடையாளத்தை பெற வேண்டும்.

8. திருப்பலியில் பங்கு கொள்ளாமல் நற்கருணை பெறக் கூடிய சந்தர்ப்பங்கள் எவை?
   1. நோயாளி
   2. முதியோர்
   3. திருப்பலி ஒப்புக் கொடுக்க குருவானவர் இல்லாத போது

9. ஒரு நாளில் பல திருப்பலியில் பங்கு கொண்டாலும் எத்தனை முறை நற்கருணை பெறலாம்?
   2 முறை

10. திருப்பலியில் பங்கு கொள்ளாமல் இரண்டாம் முறை நற்கருணை பெற தகுதியுடையவர் யார்?
    ஆபத்தான நிலையிலுள்ள நோயாளி

பாடம் - 14

## திருவிவிலியத்தில் தூய ஆவி

1. உறுதிப்பூசுதல் அருளடையாளத்தின் மூலம் நாம் யாரைப் பெற்றுக் கொள்கின்றோம்?
   தூய ஆவியானவரை

2. உறுதிப்பூசுதல் அருளடையாளத்தின் மூலம் நாம் பெறும் நன்மைகள் எவை?
   - முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவனாகின்றோம்.
   - தூய ஆவியானவரால் ஆட்கொள்ளப்படுகின்றோம்.

3. பழைய ஏற்பாட்டில் தூய ஆவியானவருக்கு வழங்கப்பட்ட பெயர்கள் 3 தருக.
   1. ஆவி
   2. கடவுளின் ஆவி
   3. தூய ஆவி

4. பழைய ஏற்பாட்டில் ஆவியானவருக்கு "ஆவி" என வழங்கப்பட்டதை கூறும் நூல்?
   எண்ணிக்கை நூல்

5. புதிய ஏற்பாட்டில் ஆவியானவருக்கு "தூய ஆவி" என வழங்கப்பட்டதை கூறும் நூல்?
   திருத்தூதர் பணி நூல்

6. கிறிஸ்துவின் வாழ்வில் தூய ஆவியானவர் செயல்ப்பட்ட சந்தர்ப்பங்கள் எவை?
   1. கிறிஸ்துவின் பிறப்பை அன்னை மரியாளுக்கு அறிவித்த போது
   2. புனித யோசேப்புக்கு அன்னை மரியாளை ஏற்றுக் கொள்ளும்படி கூறிய போது
   3. இயேசுவின் திருமுழுக்கின் போது
   4. இயேசு திருத்தூதர்களுக்கு தூய ஆவியானவரை அனுப்பிய போது
   5. திருத்தூதர்கள் இயேசுவின் பெயரால் தூய ஆவியானவரை கொடுத்த போது

7. பழைய ஏற்பாட்டில் ஆவியானவருக்கு "கடவுளின் ஆவி" என பெயர் வழங்கப்பட்டதை கூறும் நூல்?
   தொடக்க நூல்

8. பரிசுத்த ஆவியானவரின் வருகையை சுருக்கமாகத் தருக?
   இயேசு உயிர்த்து 40ம் நாள் விண்ணகம் சென்ற பின் சீடர்கள் யூதர்களுக்கு பயந்து அறையில் தாய் மரியாள் உட்பட 120 பேர் செபித்துக் கொண்டிருந்த போது அவர் விண்ணகம் சென்ற 10ம் நாளில் திடீரென பேரிரைச்சலுடன் நெருப்பு போன்ற நாவு வடிவில் அங்கிருந்த எல்லோர் மீதும் ஆவியானவர் இறங்கினார்.

9. தூய ஆவியை பெற்ற ஒருவர் யாருக்கு ஒப்பிடப்படுகின்றார்?
   படைவீரருக்கு

10. பேந்தகோஸ்து திருநாளின்போது பேதுருவின் உரையைக் கேட்டு மனம் மாறியவர்கள் எத்தனை பேர்?
    3000 பேர்

11. பரிசுத்த ஆவியானவரின் வருகையின் போது தாய் மரியாள் உட்பட எத்தனை பேர் கூடியிருந்தனர்?
    120 பேர்

12. பரிசுத்த ஆவியானவரின் வருகையால் திருத்தூதர்களில் ஏற்பட்ட மாற்றம் யாது?
    1. துணிவுடன் இயேசுவுக்கு சான்று பகர்ந்தது
    2. அயல் மொழிகளில் பேசியது
    3. புதுமைகள் செய்தது
    4. தீவிர போதனையில் ஈடுபட்டது.

13. ஆவியானவரை குறிக்கும் அடையாளங்கள் எவை?
    1. காற்று 2. நெருப்பு 3. நீர்த்தடாகம்

14. இயேசு விண்ணகம் செல்லும் முன் வாக்களித்தது யாரை?
பரிசுத்த ஆவியானவரை

15. பரிசுத்த ஆவியானவரின் வருகையின் போது இடம் பெற்ற நிகழ்வுகள் யாது?
   1. கொடுங்காற்று வீசியது
   2. பேரிரைச்சல் கேட்டது
   3. அக்கினி நாவு வடிவில் தோன்றியது.

16. தூய ஆவியானவரின் வரம் வேண்டி செபம் எழுதுக.
அன்புத் தந்தையே இறைவா, திருத்தூதர்கள் மீது ஆவியானவரைப் பொழிந்து, அவர்களை ஆவியானவரின் அருட் கொடைகளால் நிரப்பினீரே, அதே போல் எங்கள் மீதும் தூய ஆவயானவரைப் பொழிந்து, அவரின் அருட் கொடைகளை நாம் பெற அருள் பொழிய வேண்டும் என்று உம்மை மன்றாடுகின்றோம் ஆமென்.

**அலகு - 15**

## உறுதிப்பூசுதல் பெற ஆயத்தம்

1. உறுதிப்பூசுதல் பெறத் தேவையான தகுதிகள்?
   1. திருமுழுக்கு பெற்றிருத்தல்
   2. 14 வயது நிறைவடைந்திருத்தல்.
   3. ஒப்புரவு அடையாளத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
   4. முறையான மறை அறிவைப் பெற்றிருத்தல்.
   5. உறுதிப்பூசுதலைப் பெற முழுவிருப்பம் கொண்டிருத்தல்.

2. உறுதிப்பூசுதல் வழியாக கிடைக்கும் கொடைகள்
   1. திருமுழுக்கின் போது பெற்ற இறையருள் வளர்ச்சியடைகிறது.
   2. திருச்சபையில் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றோம்.
   3. இறைவனை "அப்பா தந்தாய்" என அழைக்கும் உரிமை கிடைக்கின்றது.
   4. ஆன்மாவில் அழியாத முத்திரை பதிக்கப்படுகின்றது.
   5. தூய ஆவியின் கொடைகள் வளர்ச்சி அடைகிறது

3. உறுதிப்பூசுதலை வழங்குபவர் யார்?
   1. ஆயர்
   2. வளந்தோருக்கான திருமுழுக்கின் போது குருவானவரால் உறுதிப்பூசுதல் வழங்கப்படுகின்றது.
   3. மரணத்தருவாயில் இருக்கும் கிறிஸ்தவனாக இருப்பின் குருவானவரால் உறுதிப்பூசுதலை வழங்க முடியும்.

4. உறுதிப்பூசுதல் மூலம் கிடைத்த அருட்கொடைகளை வளர்த்துக் கொள்ள நீர் செய்யக் கூடிய செயல் 5 தருக?
   1. இயேசுவைப் பற்றி இறைவாக்குரைப்பேன்.
   2. கிறிஸ்துவின் சாட்சியாக முன்மாதிரியாக வாழ்வேன்.
   3. தினமும் திருப்பலியில் பங்கு கொள்வேன்.
   4. மறைக்கல்வி வகுப்புக்கு ஒழுங்காகச் செல்வேன்.
   5. பீடப்பணியாளராக பணி புரிவேன்.

5. தூய ஆவியின் கொடைகள் எத்தனை?
   7 (ஏழு)

6. தூய ஆவியின் கொடைகள் எவை?
   1. ஞானம்
   2. புத்தி
   3. அறிவு
   4. திடம்
   5. விமரிசை
   6. பக்தி
   7. தேவபயம்

7. தூய ஆவியின் **ஞானம்** என்னும் கொடையினால் பெறும் நன்மை யாது?
   வாழ்க்கைக்கு தேவையானதையும், தேவையற்றதையும் தெரிந்து கொள்ளும் ஆற்றல் கிடைக்கின்றது.

8. தூய ஆவியின் **புத்தி** என்னும் கொடையினால் பெறும் நன்மை யாது?
   இறைத்தந்தை பார்ப்பது போல் அனைத்தையும் பார்க்கவும், செயற்படவும் ஆற்றல் கிடைக்கின்றது.

9. தூய ஆவியின் **அறிவு** என்னும் கொடையினால் பெறும் நன்மை யாது?
   நாம் வாழும் சூழலை அறிந்து, அதில் இறைவனைக் கண்டு மகிழ ஆற்றல் கிடைக்கின்றது.

10. தூய ஆவியின் **திடம்** என்னும் கொடையினால் பெறும் நன்மை யாது?
    துன்பங்கள் மத்தியிலும் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்ற ஆற்றல் கிடைக்கின்றது.

11. தூய ஆவியின் **விமரிசை** என்னும் கொடையினால் பெறும் நன்மை யாது?
    நல்லதை கடைப்பிடிக்கவும் தீயதை விலக்கவும் ஆற்றல் கிடைக்கின்றது.

12. தூய ஆவியின் **பக்தி** என்னும் கொடையினால் பெறும் நன்மை யாது?
இறைவன் மீது பற்றுதி கொண்டு அவருக்கு எம்மை கையளிக்க ஆற்றல் கிடைக்கின்றது.

13. தூய ஆவியின் **தேவபயம்** என்னும் கொடையினால் பெறும் நன்மை யாது?
நமது தவறுகளால் இறைவனை விட்டு பிரியாமல் இருக்க ஆற்றல் கிடைக்கின்றது.

14.தூய ஆவியின் கனிகள் எத்தனை?
12

15. தூய ஆவியின் கனிகள் எவை?

| | | | |
|---|---|---|---|
| 1. பரம அன்பு | 4. பொறுமை | 7. சகிப்பு | 10. அடக்க ஒடுகம் |
| 2. மகிழ்ச்சி | 5. இரக்கம் | 8. சாந்தம் | 11. இச்சையடக்கம் |
| 3. அமைதி | 6. நன்னயம் | 9. விசுவாசம் | 12. நிறை கற்பு |

16.உறுதிப்பூசுதல் பெற்றவரின் கடமைகள் 5 தருக.
1. இறைவனைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளல்
2. கிறிஸதுவின் அன்பில் வளர்ந்து அவ்வாறே வாழ்தல்.
3. கிறிஸ்தவுக்காக துணிந்து சான்று பகர்தல்
4. கிறிஸ்துவுடன் இணைந்து உலகை தூய்மைப்படுத்தல்.
5. முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக வார்த்தையினாலும், செயலினாலும் சான்று பகர்தல்.

அலகு - 16

## உறுதிப்பூசுதல் வழங்கும் சடங்கு

1. உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலியின் ஒழுங்கு முறையை தருக?
   1. ஆரம்ப வழிபாடு
   2. இறைவார்த்தை வழிபாடு
   3. உறுதிப்பூசுதல் பெறுவோரை முன் வைத்தல்.
   4. திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பிக்கப்படல்.
   5. ஆயர் உறுதிப்பூசுதல் பெறுவோர் மீது கைகளை வைத்து செபித்தல்.
   6. கிறிஸ்மா தைலம் பூசுதல்
   7. விசுவாசிகளின் மன்றாட்டு
   8. காணிக்கை ஒப்புக் கொடுத்தல்.

2. உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலியின் ஆரம்ப வழிபாட்டில் இடம் பெறும் நிகழ்வு யாது?
   உறுதிப்பூசுதல் பெற இருப்போர் முன் செல்ல, ஆயரும் ஏனையோரும் பவனியாக ஆலயத்திகுள் செல்வார்கள்.

3. உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலியின் இறைவார்த்தை வழிபாட்டில் இடம் பெறும் நிகழ்வுகள் யாது?
   1. முதல் வாசகம்
   2. பதிலுரைப்பாடல்
   3. இரண்டாம் வசகம்
   4. அல்லேலூயா
   5. புகழ் கீதம்
   6. நற்செய்தி வாசகம்
   7. மறையுரை

4. உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலியின் திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பிக்கப்படல் இடம் பெறும் நிகழ்வுகள் யாது?
   1. திருமுழுக்கின் போது கொடுத்த வாக்குறுதியை புதுப்பித்தல்.
   2. ஆயர் தூய ஆவயின் வரம் வேண்டி செபிப்பார்.

5. உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலியின் போது ஆயர் உறுதிப்பூசுதல் பொறுபவர்களின் தலை மீது கைகளை வைத்து சொல்லும் செபம் யாது?
   தூய ஆவியாரை இவர்களுள் அனுப்பியருளும் ஞானமும் மெய்யுணர்வும் தரும் ஆவியாரை, ஆலோசனையும் வல்லமையும் தரும் ஆவியாரை அறிவும், பக்தியும் தரும் ஆவியாரை இவர்களுக்கு அளித்தருளும், தெய்வ பயத்தின் ஆவியால் இவர்களை நிரப்பியருளும்.

6. உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலியின் கிறிஸ்மா தைலம் பூசப்படுவது காரணம் யாது?
   உறுதிப்பூசுதல் பெறுவதின் வெளியடையாளமாக இருப்பதால்

7. உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலியின் போது ஆயர் கன்னத்தில் தட்டுவது எதை குறிக்கின்றது?
   நாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு முகம் கொடுத்து, மறைப்பணியில் ஈடுபட கடமைப்பட்டுள்ளோம் என்பதை அடையாளப்படுத்துதற்கு.

அலகு - 17

## ஒரே இறைவனை மட்டும் ஆராதிப்பாயாக

**தூய அகுஸ்தினார்**

இவர் கி.பி. 354.11.13ம் திகதி வட ஆபிரிக்காவிலுள்ள தாகாஸ்தே நகரில் பிறந்தார். இவரின் தந்தை பற்றிசியஸ். தாய் மொனிக்கம்மாள். தாய் கிறிஸ்தவர், புனித அகுஸ்தினார் திரித்துவத்தின் மறை பொருளை புரிந்து கொள்ள முயற்ச்சித்தார். ஒரு நாள் சிறுவன் ஒருவன் கடற்கரையில் ஒரு சிப்பியினால் கடல் நீரை அள்ளி சிறு குழியில் ஊற்றுவதைக் கண்டு சிறுவனிடம் " பிள்ளாய் நீ என்ன செய்கிறாய் என்று கேட்டார். கடலிலுள்ள நீரை இக் குழிக்குள் ஊற்ற முயற்சிக்கின்றேன் என்றான். அது முடியுமா? என கேட்டார். அதற்கு சிறுவன் " நீர் சிந்திப்பதும் இதே போன்றதே, உம்மால் இறை மறை பொருளை புரிந்து கொள்வது கடினம்" என்று கூறி மறைந்தான். இதன் பின்பு புனித அகுஸ்தினார் மனிதரால் இறை மறை பொருளை புரிந்து கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டார். பின்பு மனமாற்றமடைந்து தனது 33 வயதில் பாஸ்கா ஞாயிறன்று திருமுழுக்குப் பெற்றார்.

1. தூய அகுஸ்தினார் பிறந்த ஆண்டு எது?
   கி.பி. 354 .11.13

2. தூய அகுஸ்தினார் பிறந்த இடம் எது?
   தாகாஸ்தே நகரில்

3. தூய அகுஸ்தினாரின் தந்தை பெயர்?
   பற்றிசியஸ்

4. தூய அகுஸ்தினாரின் தாய் பெயர்?
   மொனிக்கம்மாள்

5. தூய அகுஸ்தினாரின் மனமாற்றத்திற்கு காரணமாக இருந்தவை?
   தாயாரின் செபம், தூய அம்புறோசியாரின் வழிகாட்டல்

6. தூய அகுஸ்தினார் எத்தனை வயதில் திருமுழுக்கு பெற்றார்?
   33 வயதில்

7. திருவிவிலியத்தில் மூவொரு இறைவனுக்கு மட்டுமே ஆராதனை செய்ய வேண்டும் என்பதை கூறும் சந்தர்ப்பம் எது?
   அலகை இயேசுவிடம் நீர் என்னை வணங்கினால் அனைத்தையும் உமக்கு தருவேன் எனக் கூறிய போது

8. "என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது" எனக் கூறும் பழைய ஏற்பாட்டு நூல் எது?
   தொடக்க நூல்

9. கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை உண்மையாக இருப்பது எது?
   ஒரே இறைவன் மூன்று ஆட்களாய் இருக்கின்றார்.

10. மூவொரு கடவுளில் தந்தையின் செயற்பாடு யாது?
    உலகைப் படைத்து பராமரித்து பாதுகாப்பது

11. மூவொரு கடவுளில் மகனின் செயற்பாடு யாது?
    உலகை மீட்பது

12. மூவொரு கடவுளில் தூய ஆவியின் செயற்பாடு யாது?
    உலகைப் புனிதப்படுத்துவது

13. கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன என தந்தையின செயற்பாட்டைக் கூறும் நூல் எது?
    தொடக்கநூல்

14. கிறிஸ்தவக் குடும்பத்தின் கடமை யாது?
    1. நற்செய்தியை அறிவிப்பது, 2. மறைத்தூதுப் பணி

15. எவ்வாறு கிறிஸ்தவக் குடும்பம் தந்தையின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றது?
குழந்தைகளை பெற்று அவர்களை பேணி வளர்ப்பதில்

16. மூவொரு கடவுளின் அன்புறவை நமக்குள் பலப்படுத்த நாம் செய்ய வேண்டியது?
    1. தினமும் செபிக்க வேண்டும்.
    2. திருப்பலியில் பங்கு கொள்ள வேண்டும்.
    3. இறைவார்த்தையை வாசித்து தியானிக்க வேண்டும்.

17. மூவொரு இறைவனின் பணியைப் போல் குடும்பங்கள் செய்ய வேண்டிய பணிகள் எவை?
    1. ஒற்றுமையாக இருக்க வேண்டும்.
    2. பிறரை அன்பு செய்ய வேண்டும்.
    3. பிறருக்கு உதவ வேண்டும்.
    4. சமதானமாக வாழ வேண்டும்.

18. மூவொரு இறைவனைப் போல் வாழ இறை வரம் வேண்டி செபம் எழுதுக.
அன்புத் தந்தையே இறைவா, உங்களைப் போல் நாமும் ஒற்றுமையாக வாழவும், பிறரை அன்பு செய்யவும், அவர்களுக்கு உதவி செய்து வாழவும் ஒருவரோடு ஒருவர் சமதானமாக வாழ நீர் எமக்கு தந்த படைப்புக்களை பாதுகாத்து, விருத்தி செய்து வாழ வேண்டிய அருளை தந்தருள வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றேன் ஆமென்.

19. தூய திரித்துவத்தின் மறை பொருள் என்பது யாது?
ஒரே இறைவன் மூன்று ஆட்களாக இருப்பது. தந்தை, மகன், தூய ஆவியாக செயற்படுவது இறைவன் தந்தையாகவும், மகன் இயேசுவாகவும், தூய ஆவயாகவும் செயற்படுதல்.

20. மூவொரு இறைவனின் வெளி அடையாளமாக இருப்பது எது?
கிறிஸ்தவக் குடும்பம்

21. மூவொரு இறைவனின் வெளி அடையாளமாக இருப்பது கிறிஸ்தவக் குடும்பம் எனக் கூறும் நூல் எது?
கத்தோலிக்க திருமறை நூல்

22. கத்தோலிக்க திருமறை நூலில் எந்த அதிகாரத்தில் மூவொரு இறைவனின் அடையாளமாக இருப்பது கிறிஸ்தவக் குடும்பம் எனக் கூறப்படுகின்றது?
2205

23. கத்தோலிக்க திருமறை நூலில் எந்த அதிகாரத்தில் தந்தை, மகன், தூய ஆவியின் அன்புறவை கிறிஸ்தவக் குடும்பம் பிரதிபலிக்கின்றது எனக் கூறப்படுகின்றது?
2205

24. கத்தோலிக்க திருமறை நூலில் எந்த அதிகாரத்தில் குழந்தை பேறும் அதனைப் பேணி வளர்ப்பதும் இறைத் தந்தையின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றது எனக் கூறப்படுகின்றது?
2205

25. கத்தோலிக்க திருமறை நூலில் எந்த அதிகாரத்தில் மூவொரு கடவுளின் அன்புறவை நமக்குள் பலப்படுத்த நாம் தினமும் செபிக்க வேண்டும், திருப்பலியில் பங்கு கொள்ள வேண்டும், இறைவார்த்தையை வாசித்து தியானிக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது?
2205

26. இயேசு சீடர்களுக்கு கொடுத்த கட்டளை யாது?
எல்லா மக்களையும் சீடராக்குங்கள், தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்.

27. அலகை இயேசுவிடம் நீர் என்னை வணங்கினால் அனைத்தையும் உமக்கு தருவேன் எனக் கூறிய போது இயேசு அளித்த பதில் யாது?
“உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக.”

28. அலகையினால் இயேசு 2ம் முறையாக சோதிக்கப்பட்டதிலிருந்து எமக்கு கற்பிக்கப்படும் பாடம் யாது?
    1. இறைவனை மட்டுமே ஆராதனை வெய்ய வேண்டும்.
    2. அதிகாரத்திற்கும் சொத்துக்கும் அடிமையாகக் கூடாது.

அலகு - 18

## ஒரே இறைவனில் நம்பிக்கை வாழ்வு

1. அந்தியோக்கு எப்பிபான் அரசன் செய்த கொடூரமான செயல் எது?
   தாயையும் ஏழு பிள்ளைகளையும் கொன்றது

2. ஏன் ஆந்தியோக்கு எப்பிபான் அரசன் தாயையும் ஏழு பிள்ளைகளையும் கொன்றான்?
   பன்றி இறைச்சியை உண்ண மறுத்ததால்

3. அந்தியோக்கு எப்பிபான் அரசன் செய்த கொடூரமான செயல் எதை எமக்கு உணர்த்துகின்றது?
   மூட நம்பிக்கைக்கு அடிமையாகக் கூடாது

4. மூட நம்பிக்கைகள் எவை?
   1. செய்வினை
   2. சாஸ்திரம்
   3. மந்திரங்கள்
   4. நல்ல நேரம் பார்த்தல்.

5. மூட நம்பிக்கை எத்தனையாம் கட்டளைக்கு எதிரானது?
   1ம் கட்டளைக்கு

6. இஸ்ராயேல் மக்கள் உடன்படிக்கை நாட்டில் வாழ வேண்டிய முறையைப் பற்றி கூறும் நூல்?
   இணைச்சட்டம்

7. "மானிடா இம்மனிதர் சிலைகளிடம் தங்கள் மனதைப் பறிகொடுத்து அவற்றை தங்கள் முன் எழுப்பும் தீச் செயலில் ஈடுபடுகின்றார்கள்" என்ற கூற்றோடு தொடர்புடைய இறைவாக்கினர்?
   எசேக்கியேல்

8. "சிலைகள் பக்கம் திரும்ப வெண்டாம் உங்களுக்கெனத் தெய்வப் படிமங்களை வார்த்துக் கொள்ள வேண்டாம். நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்." என்ற கூற்று காணப்படும் நூல் எது?
   லேவயர்

9. இஸ்ராயேல் மக்கள் மூட நம்பிக்கையை நம்பியதால் எவ்வாறு தண்டிக்கப்பட்டனர்?
   பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்டு

10. போலி இறைவாக்கினர்ளை நம்ப வேண்டாம் எனக் கூறும் நூல்?
    இணைச்சட்டம்

11. முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் இறைவனுக்கு மட்டும் அஞ்ச வேண்டும், அவர் கட்டளைகளைக் கடைப்பபடித்து வாழ வேண்டும் எனக் கூறும் நூல்?
    இணைச்சட்டம்

12. இறைவனுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளச் செய்ய வேண்டியவை?
    1. ஒரே இறைவனை மட்டும் ஆராதித்தல்.
    2. ஒரே இறை வழிபாடடில் இறை உறவை வளர்த்தல்.
    3. மூட நம்பிக்கைக்கு அடிமையாகக் கூடாது.
    4. வாழ்வின் சாவால்களுக்கு முகங்கொடுத்தல்.
    5. பிசாசு, ஆவிகளில் நம்பிக்கை வைக்கக் கூடாது

13. ஒரே இறைவனை மட்டும் ஆராதிக்க நீர் செய்ய வேண்டியது?
    1. இறைவனைத் தவிர வேறு தெய்வங்களை வணங்கக் கூடாது.
    2. மூட நம்பிக்கைக்கு அடிமையாகக் கூடாது.
    3. இறைவனுக்கு மட்டும் அஞ்ச வேண்டும்.
    4. இறை கட்டளைப் படி வாழ வேண்டும்
    5. முழு இதயத்தோடும் உள்ளத்தோடும் அன்பு செய்ய வேண்டும்.

அலகு - 19

## தூயோர் வணக்கம்

1. புனித அந்தோனியார்
   1. மறையுரை ஆற்றுவதில் சிறந்தவர்.
   2. ஏழைகள் மீது இரக்கம் உடையவர்.
   3. புதுமைகள் புரிபவர்.
   4. பல சமயத்தவரும் இவரில் நம்பிக்கை கொள்கின்றனர்.
   5. இவர் கப்புச்சின் சபையைச் சேர்ந்தவர்.

2. புனித அந்தோனியாருடைய வாழ்விலிருந்து உமது வாழ்க்கைக்கு கிடைக்கக் கூடிய முன்மாதிரிகைகள் 5 எழுதுக.
   1. இறைவனில் நம்பிக்கை கொள்ளுதல்.
   2. இறைவனுக்காக பணி செய்ய முன் வந்தமை.
   3. இறைவனுக்காக இறப்பதை விரும்பியமை.
   4. இறைவார்த்தையை விருப்புடன் படித்தமை.
   5. ஏழைகள் மீது இரக்கம் காட்டிமை.

3. திருச்சுரூப வணக்கத்தின் நோக்கம் யாது?
   1. புனிதர்களை நினைவு கூருவதாகும்.
   2. அவர்களின் முன்மாதிரிகைகளை பின் பற்றி வாழுவதற்கு.

4. இறைவனின் எதிரி யார்?
   வேறு தெய்வங்கள்

5. தூயோரின் வழிகாட்டலுக்கு ஏற்ப நீர் செய்ய வேண்டியவை யாது?
   1. இறைவனுக்கு முதலிடம் கொடுத்தல்.
   2. இறைவார்த்தையை தினமும் வாசித்தல்.
   3. பிறருக்கு உதவுதல்.
   4. தூயோரின் முன்மாதிரிகையான வாழ்க்கையை பின்பற்றுதல்.
   5. எனது ஆலயப் புனிதரின் திருவிழாவின் போது நடைபெறும் நவநாட்களிலும், திருப்பலியிலும் பங்கு கொள்ளுதல்.

அலகு - 20

## இறைவனின் திருப்பெயரை மாட்சிப்படுத்தல்

1. இரண்டாம் கட்டளை யாது?
   உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே.

2. இறைவனின் பெயரை நாம் எதற்கு பயன்படுத்த வேண்டும்?
   1. ஆசீர்வாதத்திற்கு
   2. புகழ்வதற்கு
   3. மன்றாடுவதற்கு

3. உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கே: அவருக்கே பணிபுரிந்து அவரைப் பற்றிக் கொள்ளுங்கள் அவர் பெயராலே ஆணையிடுங்கள். என்ற வார்த்தை அடங்கியுள்ள நூல்?
   இணைச்சட்டம்

4. பொய் சொல்லுவோரின் வாய் அடைக்கப்படும் எனக் கூறும் நூல்?
   இணைச்சட்டம்

5. இயேசு 2ம் கட்டளைப்படி வாழ கூறும் அறிவுரை யாது?
   ஆணையிடவே வேண்டாம், ஆம் என்றால் ஆம் எனவும் இல்லை என்றால் இல்லை எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடமிருந்து வருகிறது.

6. ஆணையிடுதல் தொடர்பாக திருச்சபையின் படிப்பினைகள்?
   நீதியின் முன் ஒருவர் தான் சொல்வது உண்மை என அறிந்திருந்தால் சத்தியம் செய்ய முடியும். அப்போது உண்மையை மட்டும் வெளிப்படுத்த வேண்டும்.

7. பத்துக்கட்டளைகளில் 8வது கட்டளை எது?
   பொய் சொல்லாதே

8. நேர்ச்சை என்பது யாது?
   இறைவனை மாட்சிப்படுத்துவதற்காக தம் சொந்த விருப்பின்படி ஒரு செயலை செய்ய வாக்குப் பண்ணுதல்.

9. நேர்ச்சை தொடர்பான திருச்சபையின் படிப்பினை யாது?
   இறைவனை மாட்சிப்படுத்துவதற்காக தம் சொந்த விருப்பின்படி ஒரு செயலை செய்ய வாக்குப் பண்ணலாம். ஆனால் அதைப் பற்றி நன்கு சிந்தித்து செயற்படல் வேண்டும். ஏனெனில் நேர்ச்சையை நிறைவேற்றத் தவறுதல் பாவமாகும்.

10. நேர்ச்சை செய்யாமல் இருப்பது பாவமல்ல எனக் கூறும் நூல் எது?
    இணைச்சட்டம்

11. நேர்ச்சை தொடர்பாக நீர் கடைப்படிக்க வேண்டியது?
    1. கடவுளின் பெயரை முறையற்ற வழியில் பயன்படத்தக் கூடாது.
    2. பிறருக்கு கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.
    3. என்னால் செய்யக் கூடியதை மட்டும் சொல்ல வேண்டும்.
    4. தூய்மையான மனதோடு செய்ய வேண்டும்.

அலகு - 21

## ஞாயிறு தினத்தை பரிசுத்தமாக அனுசரித்தல்

1. ஓய்வு நாளை (ஞாயிறு தினத்தை) தூய்மையாக கடைப்படிக்க செய்யக் கூடிய செயல்கள் 4 தருக.
   1. முழுத் திருப்பலியில் பங்கு கொள்ளல்.
   2. மறைக்கல்வி வகுப்புக்கு செல்லல்.
   3. நோயாளிகளை பார்க்கச் செல்லல்.
   4. ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்தல்
   5. குடும்பத்தினரின் தேவைகளில் உதவுதல்.

2. ஓய்வு நாளை கருத்தாய் கடைப்பிடி எனக் கூறும் நூல் எது?
   விடுதலைப் பயணம்

3. மூன்றாம் கட்டளை எது?
   ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு.

4. கிறிஸ்தவர்களின் ஓய்வு நாள் எது?
   ஞாயிற்றுக் கிழமை

5. கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தினம் எது?
   ஞாயிற்றுக் கிழமை

6. ஓய்வு நாளை எபிரேய மொழியில் எவ்வாறு அழைப்பர்?
   சாபத்

7. மூன்றாம் கட்டளைக்கு எதிரான பாவங்கள்?
   1. ஞாயிறு தினத்திலும் கடன் திருநாட்களிலும் திருப்பலியில் பங்கேற்காமல் இருத்தல்.
   2. திருப்பலியில் செயலூக்கமின்றி இருத்தல்.
   3. திருப்பலி நேரத்தில் பராக்கிலும், வீணாக மற்றவரோடு பேசுதல்.
   4. கையடக்க தொலைபேசி பயன்படுத்துவதல்.
   5. திருப்பலியில் பங்கு கொள்ளாமல் சுற்றுலாக்களிலும், விருந்துபசாரங்களிலும் பங்கு கொள்ளுதல்.

8. ஞாயிறு தினம் புனிதமான நாளாக இருப்பதற்கு காரணம்?
   1. இயேசு உயிர்த்த நாள்.
   2. இயேசு உயிர்த்த காட்சி கொடுத்த நாள்.
   3. பெந்தக்கோஸ்து திருநாள்.

9. இயேசு உயிர்த்து காட்சி கொடுத்த சந்தர்பங்கள் 3 தருக்
   1. மகதலா மரியாவுக்கு
   2. திருத்தூதர்களுக்கு
   3. தோமாவுக்கு

10. இறைவன் உலகை எத்தனை நாளில் படைத்தார்?
    6 நாளில்

11. உலகைப் படைத்தது யார்?
    இறைவன்

12. வாரத்தில் எத்தனையாம் நாள் ஓய்வு நாள்?
    7ம் நாள்

13. முழுத் திருப்பலியில் பங்கு கொள்ளல் என்பதை விளக்குக.
    முழுத் திருப்பலியில் பங்கு கொள்ளல் என்பது வருகை பாடல் முதல் இறுதிப்பாடலவரை திருப்பலியில் பங்கு கொள்வதாகும்.

14. ஞாயிறு தினங்களிலும் கடன் திரு நாட்களிலும் முழுத்திருப்பலியில் பங்கு பற்றாமல் இருக்கும் சந்தர்ப்பங்கள் எவை?
    1. நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருத்தல்.
    2. நோயாளியைப் பராமரித்தல்.
    3. அண்மித்த ஆலயங்களில் திருப்பலி நடைபெறாது இருத்தல்.
    4. மிக முக்கிய பணியில் ஈடுபட்டிருத்தல்.

15. ஞாயிறு தினங்களிலும் கடன் திரு நாட்களிலும் முழுத்திருப்பலியில் பங்கு கொள்ளாமல் இருந்தால் அதற்கு பதிலாக செய்ய கூடியது எவை?
    அவ்வேளையில் தனிமையில் செபிப்பதையும் செப வழிபாடுகளில் பங்கு கொள்வதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

16. ஞாயிறு திருப்பலியில் நாம் பங்குபற்றுவதன் மூலம் அடையும் நன்மை யாது?
    1. கிறிஸ்துவுடனும், திருச்சபையுடனும் ஒன்றித்து விசுவாச உறவில் வளர்ச்சியடைகின்றோம்.
    2. இறைவனின் புனித தன்மைக்கும் மீட்பின் நம்பிக்கைக்கும் சான்று பகர்கின்றோம்.
    3. தூய ஆவியின் வழிநடத்துதலில் இறைமக்களாகி உறுதி பெறுகின்றோம்.